بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْم    نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ    وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْد

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 8

இதழ் 19

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரி கமரி 1444 - ஷவ்வால் 20 ★ ஹிஜ்ரி ஷம்ஸி 1402 - ஹிஜ்ரத் 11 ★ 11 மே 2023


## அல்லாஹ்வின் கட்டளை

قَوْلٌ مَّعْرُوْفٌ وَّمَغْفِرَةٌ خَيْرٌ مِّنْ صَدَقَةٍ يَّتْبَعُهَآ اَذًى ؕ وَاللّٰهُ غَنِىٌّ حَلِيْمٌ ﴿۲۶۴﴾

பொருள் :

துன்பம் பின் தொடரும் தருமத்தை விட இன்சொல்லும் மன்னித்தலும் சிறந்தவையாகும். மேலும், அல்லாஹ் தேவைகளற்றவனும் சகித்துக் கொள்பவனுமாவான்.

(அல்பக்கரா : 264)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களின் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## ஒரு உண்மையான முஸ்லிம் இறை கோபத்திற்குரியவராகவும் இருக்க முடியாது. வழிதவறியவர்களின் வட்டத்திலும் இணைய முடியாது

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

இஸ்லாமிய மார்க்கம் நடுநிலை பாங்கினைக் கொண்டுள்ளது. ஏனெனில் அல்லாஹ் அதற்கான போதனையையே வழங்கியுள்ளான். மேலும் இறை கோபத்திற்கு ஆளானவர்களிடமிருந்தும், வழிதவறியவர்களிடமிருந்தும் தப்பிப்பதற்கு அல்லாஹ் வழிகாட்டியுள்ளான். ஒரு உண்மையான முஸ்லிம் இறை கோபத்திற்குரியவராகவும் ஆக முடியாது. வழிதவறியவர்களின் வட்டத்திலும் இணைய முடியாது. எந்த சமுதாயத்தின் மீது இறை கோபம் இறங்கியுள்ளதோ அந்த சமுதாயம் இறை கோபத்திற்கு ஆளான சமுதாயம் ஆகும். அவர்கள் சுயமே கோபத்தை ஈர்க்கக் கூடியவர்களாக இருந்தனர். எனவே இறைக் கோபத்தை ஈர்த்துக் கொண்டனர். மேலும் அவர்கள் யூதர்கள் ஆவர். வழிதவறியவர்கள் என்பதன் பொருள் கிறித்தவர்கள் ஆவர். மனிதனிடம் உள்ள மிருக உணர்ச்சியால் கோபத்தின் நிலை உருவாகின்றது. மேலும் வழிகேடு என்பது கற்பனை ஆற்றலால் உருவாகின்றது. கற்பனை ஆற்றல் என்பது வரம்பு மீறிய நேசத்தால் உருவாகின்றது. ஆகுமற்ற அன்பு கொண்ட மனிதர் வழிதவறிவிடுகின்றார்.

حُبُّكَ الشَّيْءَ يُعْمِيْ وَيُصِمُّ

(ஒரு பொருளின் மீதான ஒருவரின் வரம்புமீறிய அன்பு அவரை குருடராகவும், செவிடராகவும் ஆக்கிவிடுகின்றது) என்பதன் ஊற்றும் பொருளும் கற்பனை ஆற்றல் ஆகும். அதன் உதாரணம் இதுவாகும். ஒருவர் போர்வையை காளைமாடாக கருதுகின்றார். மேலும் கயிறை பாம்பாக கருதிக் கொள்கின்றார். இதன் காரணமாகவே ஒரு கவிஞர் தனது காதலியை மற்றவர்களை விட உயர்ந்தவராக இருப்பதைப் போன்று ஆக்கிக் கொள்கின்றார்.

கற்பனை ஆற்றிலில் உத்வேகம் அடைந்து மனிதன் நடுநிலைப் பாங்கின் வரையறையிலிருந்து வெளியேறி விடுகின்றான். ஆக, கோபத்தின் நிலையில் மிருகத்தனம் அதிகரித்து விடுகின்றது. உதாரணமாக, நாய் முதலில் மெதுவாக குரைக்கின்றது. பின்னர் அதனைக் கோபமூட்டினால் அதன் சப்தம் மேலும் அதிகரித்து விடுகின்றது. இறுதியில் ஆக்ரோஷம் அடைந்து சதையை கீறி கிழித்து உண்கின்றது. யூதர்களும் இதுபோன்றே அநீதி மற்றும் வரம்பு மீறுதலின் தீய நடத்தைகளை மேற்கொண்டனர். மேலும் கோபத்தில் வரம்பு மீறிவிட்டனர். இறுதியில் அவர்கள் சுயமே இறை கோபத்திற்கு ஆளாகிவிட்டனர். கற்பனை ஆற்றல் மேலோங்கி விடும்போது மனிதன் கயிறை பாம்பாக்கிக் கொள்கின்றான். மேலும் மரத்தை யானை என்று கூறுகின்றான். அதற்கு அவனிடம் எந்த சான்றும் இருப்பதில்லை. இந்த ஆற்றல் பெண்களிடம் அதிகம் உள்ளது. இதன் காரணமாகவே கிறித்தவ மார்க்கம் மற்றும் சிலை வணக்கத்தின் பெரும் ஆதரவாளர்களாக பெண்கள் உள்ளனர். சுருக்கமாக, இஸ்லாம் நடுநிலைப் பாங்கின் வரையறைக்குள் இருப்பதற்கு போதனை வழங்கியுள்ளது. அதன் பெயர் اَلصِّرَاطُ الْمُسْتَقِيْم (நேரான வழியாகும்).

(மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 456, காதியான் பதிப்பு -2003)

* * * * *

## நபிமொழி

(2377) ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பஹ்ரைனில் சொத்துகளை அன்ஸார் ஸஹாபிகளுக்கு கொடுப்பதற்காக அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அழைத்தார்கள். அதற்கு, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் எங்களுக்கு வழங்குகின்றீர்கள் என்றால் பின்னர் எங்கள் சகோதரர்களாகிய குரைஷியர்களுக்கு (அதாவது முஹாஜிர் சஹாபிகளுக்கு) அதுபோன்று வழங்குங்கள் என்று அவர்கள் கூறினர். ஆனால், அந்த நேரத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வேறு எதுவும் இருக்கவில்லை. எனக்கு பிறகு உங்கள் மீது மற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்பதை நீங்கள் விரைவில் காண்பீர்கள். என்னை நீங்கள் வந்து சந்திக்கும் வரை அந்த நேரத்தில் நீங்கள் பொறுமை செய்யுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

يُحِبُّوْنَ مَنْ هَاجَرَ اِلَيْهِمْ وَلَا يَجِدُوْنَ فِيْ صُدُوْرِهِمْ حَاجَةً مِّمَّاۤ اُوْتُوْا وَيُؤْثِرُوْنَ عَلٰۤى اَنْفُسِهِمْ وَلَوْ كَانَ بِهِمْ خَصَاصَةٌ ۚ

என்று அல்லாஹ் அன்ஸார் ஸஹாபிகளைக் குறித்து கூறுகின்றான்.

பொருள்: இவர்கள் தங்களிடம் அகதிகளாக வருபவர்களை நேசிக்கின்றனர். (அகதிகளாகிய) அவர்களுக்கு வழங்கப்பட்டவைக் குறித்து தங்கள் நெஞ்சங்களில் இவர்கள் எந்த விருப்பமும் கொண்டதில்லை. மாறாக, தாங்கள் வறுமையில் இருந்தபோதிலும், தங்களை விட மற்றவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கின்றனர். (அல்ஹஷ்ர்:வசனம் 10)

ஹஸ்ரத் ஸய்யத் ஜைனுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் ஸாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: மேற்குறிப்பிட்ட ஹதீஸிலிருந்து, திருக்குர்ஆன் எடுத்துரைத்துள்ள பண்பு அன்ஸார் ஸஹாபிகளுக்கு உண்மையானதாக பொருந்துகின்றது என்று தெரிய வருகின்றது (ஸஹீஹுல் புகாரி, தொகுதி 4, கிதாப் அல்மஸாஃபாத், 2008 ஆம் ஆண்டு பதிப்பு, காதியான்)

* * * * *


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது மார்க்கத்தையும், ஷரீஅத்தையும் முழுமை செய்தான். நிறைவு செய்தான். எனவே
اَلْيَوْمَ اَكْمَلْتُ لَكُمْ دِيْنَكُمْ وَ اَتْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِيْ وَ رَضِيْتُ لَكُمُ الْاِسْلَامَ دِيْنًا
என்று திருக்குர்ஆன் அறிவிப்பு செய்தது

இஸ்லாம் தற்போது இறுதி மார்க்கம் ஆகும். இந்த வாதத்தை இஸ்லாம் மட்டுமே செய்கின்றது. வேறு எந்த மார்க்கமும் அவ்வாறு வாதம் செய்யவில்லை

தற்போது மனிதனின் ஒழுக்கம் மற்றும் ஆன்மிக முன்னேற்றத்திற்கான ஒரே வழிமுறை திருக்குர்ஆன் மட்டுமே ஆகும் என்று இந்த அறிவிப்பை அல்லாஹ் செய்து கொண்டிருக்கின்றான்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஞானம் நிறைந்த மேற்கோள்களின் ஒளியில் திருக்குர்ஆன் முழுமையான மற்றும் நிறைவான வேதமாக இருப்பது தொடர்பான குத்பா பேருரை

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகையின் நோக்கமும் முழுமையடைந்து விட்டது என்பது நிரூபணம் ஆகின்றது. மேலும் மிகவும் உன்னதமான ஷரீஅத் இறங்கிய அந்த முழுமையான மற்றும் இறுதித் தூதர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே ஆவார்கள் என்பதும் நிரூபணம் ஆகின்றது

நாம் இந்த நோக்கத்தை நமது கருத்தில் கொள்ளும்போதுதான் நமது பைஅத்தின் நோக்கமும் முழுமையடையும். எனவே திருக்குர்ஆனை ஓதுவதன் பக்கமும், புரிவதன் பக்கமும் எப்போதும் கவனம் கொள்ள வேண்டும். அதற்கான சிறந்த வழிமுறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் நூல்களும், மேற்கோள்களும் ஆகும்

எனவே நம்மில் ஒவ்வொருவரும் இந்த ரமலானில் இதன்படி அமல் செய்வதற்கு உறுதிமொழி எடுக்க வேண்டும். மேலும் திருக்குர்ஆனின் போதனைகளுக்கு ஏற்ப அமல் செய்வதற்கு ஓர் உறுதியான எண்ணம் கொண்டுவிட்டால் பின்னர் எங்கு நாம் ஆன்மிகத்தில் முன்னேற்றம் அடைந்து கொண்டிருப்போமோ அங்கு நமது சமூகமும் சொர்க்கத்தைப் போன்ற ஒரு சமூகமாக மாறிவிடும். மேலும் வீடுகளிலும், குடும்பங்களிலும் பல்வேறு நேரங்களிலும் உருவாகிக் கொண்டிருக்கும் சண்டைகள், அன்பு மற்றும் நேசத்தில் மாறிவிடும்.

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 07 ஏப்ரல் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **ஷஹாதத்** மாதம் **07ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது மார்க்கத்தையும், ஷரீஅத்தையும் முழுமை செய்தான். நிறைவு செய்தான். எனவே
اَلْيَوْمَ اَكْمَلْتُ لَكُمْ دِيْنَكُمْ وَ اَتْمَمْتُ عَلَيْكُمْ
نِعْمَتِيْ وَ رَضِيْتُ لَكُمُ الْاِسْلَامَ دِيْنًا
என்று திருக்குர்ஆனில் அறிவிப்பு செய்துள்ளான். பொருள்: இன்றைய தினம் நான் உங்களுக்காக உங்களது மார்க்கத்தை முழுமை செய்துவிட்டேன். மேலும் நான் உம் மீது எனது அருட்கொடைகளை நிறைவு செய்துள்ளேன். மேலும் நான் உங்களுக்கு மார்க்கமாக இஸ்லாத்தை தேர்ந்தெடுத்துள்ளேன். (அல்மாயிதா: வசனம்-4)

ஆக, இது முஸ்லிம்கள் மீது அல்லாஹ் செய்த பெரும் கருணை ஆகும். அதாவது அவர்களுக்கு ஒரு முழுமையான மற்றும் நிறைவான ஷரீஅத்தை அல்லாஹ் வழங்கியுள்ளான். அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மார்க்கமான இஸ்லாம் தற்போது இறுதி மார்க்கம் ஆகும். இந்த வாதத்தை இஸ்லாம் மட்டுமே செய்கின்றது. வேறு எந்த மார்க்கமும் அவ்வாறு வாதம் செய்யவில்லை. அல்லாஹ்வின் திருப்தி வேண்டும் என்றால், பின்னர் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு அதன் போதனையின்படி அமல் செய்வதைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை.

தற்போது மனிதனின் ஒழுக்கம் மற்றும் ஆன்மிக முன்னேற்றத்திற்கான ஒரே வழிமுறை திருக்குர்ஆன் மட்டுமே ஆகும் என்று இந்த அறிவிப்பை அல்லாஹ் செய்து கொண்டிருக்கின்றான். இன்னும்கூறப்போனால், இந்த போதனை எந்த அளவிற்கு முழுமையானது என்றால், பௌதீக முன்னேற்றங்களுக்கான வழிகளாகவும் தற்போது இதே போதனைதான் உள்ளது. மேலும் அவற்றின் பக்கம் அது கொண்டு செல்கின்றது. எனவே அல்லாஹ் இந்த போதனை தொடர்பாக اَكْمَلْتُ என்று அறிவிக்கின்றான் என்றால் அதன் பொருள் இதுவாகும். அதாவது, மனிதனின் அனைத்து வகையான திறமைகள் அது நல்லொழுக்க ரீதியிலானதாக இருக்கட்டும், ஆன்மிகமாக இருக்கட்டும் அல்லது பௌதீகமாக இருக்கட்டும். அவற்றை திருக்குர்ஆனின்படி அமல் செய்வதன் மூலமாக மட்டுமே பெற முடியும். மேலும் அதற்கான முழுமையான போதனையின் மீது உண்மையான முறையில் அமல் செய்யவேண்டும் என்றால் பின்னர் (அந்த முழுமையான போதனை) திருக்குர்ஆனிலிருந்து மட்டுமே கிடைக்க முடியும். நான் அருளை நிறைவு செய்துவிட்டேன் என்று கூறி அல்லாஹ் இந்த அறிவிப்பை செய்துள்ளான். மேலும் முழுமையான வலிமையுடன் இதனை கூறிவிட்டான். அதாவது மனிதனுக்கு என்னவெல்லாம் தேவையாக இருந்ததோ அவற்றை எல்லா வகையிலும் முழுமை செய்யக்கூடியது திருக்குர்ஆன் மட்டுமே ஆகும். திருக்குர்ஆன் பூர்த்தி செய்யாத எந்தவொரு தேவையுமே இல்லை. அது மனிதனின் பௌதீக தேவைகளாக இருக்கட்டும் அல்லது ஆன்மிக மற்றும் நல்லொழுக்க தரங்களை பெறுவதற்கான தேவைகள் மற்றும் வழிமுறையாக இருக்கட்டும். நீதியின் கண்கொண்டு ஒரு மனிதன் பார்க்க விரும்பினால் அவை அனைத்தும் திருக்குர்ஆனில் உள்ளது.

எனவே இந்த வசனத்துடன் திருக்குர்ஆன் இந்த அறிவிப்பை செய்துவிட்டது. அதாவது, இனி மனிதனின் இருப்பு என்பது இந்த போதனையை சார்ந்ததாக உள்ளது. மேலும் இந்த போதனை அனைத்து காலத்திற்கும் மற்றும் முழு உலக மனிதர்களுக்கும் ஆனது. மேலும் திருக்குர்ஆனிற்கு முன்னர் தற்காலிகமானதாகவும், அந்த காலத்தின் அடிப்படையிலும் அமைந்திருந்த பல்வேறு நபிமார்கள் மீது இறங்கிய அனைத்து போதனைகளும் முழு மனித குலத்திற்கானதாக இருக்கவில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதனை விளக்கியவாறு இந்த அறிவிப்பையும் செய்கின்றார்கள்: இதன்மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகையின் நோக்கமும் முழுமையடைந்து விட்டது என்பது நிரூபணம் ஆகின்றது. மேலும் மிகவும் உன்னதமான ஷரீஅத் இறங்கிய அந்த முழுமையான மற்றும் இறுதித் தூதர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே ஆவார்கள் என்பதும் நிரூபணம் ஆகின்றது.

ஆக, இது நமது கொள்கையாகும். இதன் மீது நாம் ஈமான் கொண்டுள்ளோம்.

இந்த கொள்கை (உங்களுக்கு இருக்கும்) என்றால், திருக்குர்ஆனை இறுதி ஷரீஅத்தாகவும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இறுதித் தூதராகவும் ஏற்றுக் கொள்கின்றீர்கள் என்றால் பின்னர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வாதத்திற்கு என்ன அந்தஸ்து உள்ளது? என்று அன்னார் (அலை) மீது ஆட்சேபனை செய்யக்கூடியவர்கள் ஆட்சேபனை செய்கின்றனர். அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாதம் பின்னர் என்ன? மேலும் அன்னார் இக்காலத்தில் வருவதற்கான என்ன தேவை இருந்தது? என்று ஆட்சேபனை செய்கின்றனர். இதற்கு பல்வேறு பதில்கள்

உள்ளன.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறும் கூறியுள்ளார்கள்:

நீங்கள் இந்த போதனையின்படி அமல் செய்து கொண்டிருக்கின்றீர்கள் என்றால் பின்னர் (உங்களின் கூற்று) சரியானது ஆகும். எனது வருகைக்கான எந்தத் தேவையும் இல்லை. ஆனால், காலத்தின் பொதுவான நிலைமையும், குறிப்பாக முஸ்லிம்களின் சொந்த நிலையும் ஆசிரியர் (இமாம்) ஒருவரின் தேவை உள்ளது என்ற விஷயத்தை அறிவித்துக் கொண்டிருக்கின்றது.

அடுத்து, இந்த போதனையை மறப்பது தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுயமே கூறியுள்ளார்கள். அதன் சீர்திருத்தத்திற்காக ஒவ்வொரு நூற்றாண்டிலும் முஜத்தித் தோன்றுவார்கள் என்றும் கூறியுள்ளார்கள். மேலும், திருக்குர்ஆனின் போதனை முழுமையானதாக இருந்தபோதிலும் அந்த போதனையை முஸ்லிம்கள் மறந்து விடுவார்கள். மேலும் புதிய பித்அத்கள் அவர்களிடம் உருவாகிவிடும். எனவே மார்க்கத்தை புதுப்பிப்பதற்காக முஜத்தித்மார்கள் வந்து கொண்டிருப்பார்கள். மேலும் இறுதி காலத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதி மொழி வழங்கப்பட்ட மஹ்தி தோன்றுவார். அவர் கார்த்திகை நட்சத்திரத்திலிருந்து ஈமானை பூமிக்கு கொண்டு வருவார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவிப்பு செய்திருந்தார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது பிரசுரங்களில், எழுத்துக்களில், நூல்களில் எல்லா இடத்திலும் இவ்வாறு கூறியுள்ளார்கள்:

அதாவது நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்தில் அன்னாரின் ஷரீஅத், மார்க்கம் மற்றும் திருக்குர்ஆனின் போதனையை உலகில் பரப்புவதற்காக வந்துள்ளேன். மேலும் தற்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மூலம் மார்க்கம் முழுமையடைந்துவிட்டது. அதனையும், அதன் போதனையையும் உலகின் எல்லா மூலைகளிலும் எட்ட வைப்பதற்காக நான் தோன்றியுள்ளேன்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது திருக்குர்ஆன் இறங்கியதன் மூலம் இக்காலத்தில் போதனை முழுமையடைந்துவிட்டது. எனவே அதனை பரப்புவதற்காக இக்காலத்தில் அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரை அனுப்பியுள்ளான். எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த பணியையே நிறைவேற்றினார்கள். மேலும் அதனை தொடர்வதற்காகவே அஹ்மதிய்யா ஜமாஅத் நிறுவப்பட்டது. அந்தப் பணியை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை)அவர்களால் வழங்கப்பட்ட நூல்கள் மற்றும் அன்னார் செய்துள்ள திருக்குர்ஆன் விளக்கவுரைகளுக்கு ஏற்ப அஹ்மதிய்யா ஜமாஅத் செய்து கொண்டிருக்கின்றது. இந்த நோக்கத்தை நாம் எந்த அளவிற்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம் என்பததை ஒவ்வொரு அஹ்மதியும் சிந்தித்து பார்க்க வேண்டும். ஒன்று, ஒட்டுமொத்த அளவிலான நிகழ்ச்சிகள் உள்ளன. அவை நடைபெற்று வருகின்றன. ஆனால், தனிப்பட்ட முறையிலும் நடைபெற வேண்டும். எனவே நாம் இந்த நோக்கத்தை நமது கருத்தில் கொள்ளும்போதுதான் நமது பைஅத்தின் நோக்கமும் முழுமையடையும். எனவே திருக்குர்ஆனை ஓதுவதன் பக்கமும், புரிவதன் பக்கமும் எப்போதும் கவனம் கொள்ள வேண்டும். அதற்கான சிறந்த வழிமுறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் நூல்களும், மேற்கோள்களும் ஆகும்.

திருக்குர்ஆனின் அழகு மற்றும் சிறப்புகளை சில காமமாக நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்களின் ஒளியில் எடுத்துரைத்து வருகின்றேன். இன்றும் திருக்குர்ஆனின் போதனை முழுமையானதாக இருப்பது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சில மேற்கோள்களை எடுத்துரைப்பேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: மார்க்கத்தை முழுமை செய்வதற்கான உரிமையை திருக்குர்ஆன் நிறைவேற்றி விட்டது என்பது நிரூபிக்கப்பட்டுவிட்ட விஷயம் ஆகும். அல்லாஹ் சுயமே இவ்வாறு கூறுகின்றான்:

اَلْيَوْمَ اَكْمَلْتُ لَكُمْ دِيْنَكُمْ وَ اَتْمَمْتُ عَلَيْكُمْ
نِعْمَتِيْ وَ رَضِيْتُ لَكُمُ الْاِسْلَامَ دِيْنًا

நான் உங்களுக்கு உங்களது மார்க்கத்தை முழுமை செய்துவிட்டேன். மேலும் எனது அருளை உங்கள் மீது நிறைவு செய்துவிட்டேன். மேலும் உங்களுக்கான மார்க்கமாக இஸ்லாத்தை நிர்ணயித்து மகிழ்ச்சியடைந்துள்ளேன். (அல்மாயிதா: வசனம்-4)

ஆக, திருக்குர்ஆனிற்கு பிறகு வேறு எந்த ஒரு வேதத்திற்கும் தடம் பதிப்பதற்கு இடம் இல்லை. ஏனெனில், எந்த அளவிற்கு மனிதனின் தேவை இருந்ததோ அவை அனைத்தும் திருக்குர்ஆனில் எடுத்துரைக்கப்பட்டுவிட்டது. தற்போது இறை உரையாடல்களுக்கான வாசல் மட்டுமே திறந்துள்ளது. ஆம்! இறை உரையாடல்களுக்கான வாசல் திறந்துள்ளது. அல்லாஹ் அடியார்களுடன், தனது சிறப்பிற்குரிய அடியார்களுடன் உரையாடுகின்றான். இனி எந்த ஒரு புது போதனையும் கிடையாது.

மேலும் (அந்த இறை உரையாடல்களுக்கான வாசல்) தானாகவே திறந்துவிடவில்லை. மாறாக, தெள்ளத் தெளிவான இறை உதவிகளின் வடிவத்தை தன்னகத்தே கொண்டுள்ள உண்மையான மற்றும் தூய உரையாடல்கள் ஏராளமான மறைவான செய்திகளை உள்ளடக்கியுள்ளன. அவை உள்ளத்தை தூய்மைப்படுத்திய பிறகு திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின்பற்றுதலின் மூலமாக மட்டுமே கிடைக்கின்றன. (சஷ்மாயே மஃரிஃபத், ரூஹானி கஸாயீன், தொகுதி 23, பக்கம் 80)

திருக்குர்ஆன் முழுமையான வேதம் ஆகும். எனவே தற்போது அதனை பின்பற்றுதல் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை முழுமையாக பின்பற்றுவதின் மூலமாக மட்டுமே அல்லாஹ்வுடனான தொடர்பிற்கான இந்த வழிகள் திறக்கின்றன. இதனைத் தவிர எந்தவொரு வழியும் இல்லை. எந்த ஒரு வழிமுறையும் இல்லை. தமக்கு என்னவெல்லாம் அந்தஸ்து கிடைத்ததோ அது இதன் காரணமாகவே கிடைத்தது என்று அன்னார் (அலை) கூறினார்கள்.

அடுத்து, திருக்குர்ஆன் முழுமையான போதனையாக இருப்பது தொடர்பாக அன்னார் (அலை) ஓரிடத்தில் மேலும் கூறுகின்றார்கள்: தீமையை மட்டும் கைவிட்டுவிட்டு தற்போது நான் முழுமையான சிறப்பிற்குரியவனாக ஆகிவிட்டேன் என்று மனிதன் கருதுவதை மட்டும் திருக்குர்ஆன் விரும்பவில்லை. தீமைகளை விட்டுவிடுவதால் மட்டும் மேன்மைகள் கிடைத்துவிட முடியாது. இன்னும் கூறப்போனால், அது மனிதனை உன்னதமான சிறப்புகள் மற்றும் உயர் நல்லொழுக்கத்தைக் கொண்டவனாக ஆக்க விரும்புகின்றது. எனவே மனிதன் தீமைகளை கைவிட்டுவிடுவதை மட்டும் திருக்குர்ஆன் விரும்பவில்லை. மாறாக, மனிதனிடத்தில் உயர்தரமான சிறப்புகள் மற்றும் நல்லொழுக்கத்தை உருவாக்க திருக்குர்ஆன் விரும்புகின்றது. அதாவது தீமைகளை விட்டும் மனிதன் விலக வேண்டும். பின்னர் அந்த இடத்தில் உயர்தரமான நல்லொழுக்கத்தையும் மனிதன் மேற்கொள்ள வேண்டும். மனிதகுலத்தின் நன்மை, அனுதாபம் ஆகியவற்றை உள்ளடக்கிய செயல்கள் அவனிடமிருந்து வெளிப்பட வேண்டும். மேலும் அதன் விளைவாக அல்லாஹ் அவனிடம் திருப்தியடைய வேண்டும். (மல்ஃபூஸாத், தொகுதி 7, பக்கம் 270, 1984 ஆண்டு பதிப்பு) அதாவது அந்த செயல்களின் விளைவாக அல்லாஹ் திருப்தி அடைந்து விட வேண்டும்.

எனவே திருக்குர்ஆனின் போதனைக்கேற்ப இந்த சிந்தனை நம்மிடத்தில் உருவாக வேண்டும். நம்மிடம் இந்த சிந்தனை உள்ளதா? நாம் மற்றவர்களைப் போன்று (திருக்குர்ஆனை) ஓதுவதற்கான வாதம் மட்டுமே செய்கின்றோமா? அல்லது உள்ளபடியே நம்மிடம் இந்த மாறுதல்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றனவா? அல்லாஹ்வுடன் சிறப்பான தொடர்பும் நமக்கு உருவாகிக் கொண்டிருக்கிறதா? என்று நாம் நம்மை ஆய்வு செய்ய வேண்டும்.

ரமலானிலும் திருக்குர்ஆன் ஓதப்படுகின்றது. தர்ஸும் கேட்கின்றோம். எனவே அதனை வாழ்க்கையில் செயல்படுத்துவதும் அவசியம் ஆகும். நாமோ நமது பைஅத் உடன்படிக்கையில் இந்த உறுதிமொழியும் செய்திருக்கின்றோம். பத்து நிபந்தனைகள் உள்ளன. திருக்குர்ஆனின் ஆட்சியை முழுமையாக தங்களிடத்தில் ஒப்புக் கொள்வோம் என்று அவற்றில் எழுதப்பட்டுள்ளது. (இஸாலா அவ்ஹாம், ரூஹானி கஸாயீன் தொகுதி 3, பக்கம் 564)

எனவே நம்மில் ஒவ்வொருவரும் இந்த ரமலானில் இதன்படி அமல் செய்வதற்கு உறுதிமொழி எடுக்க வேண்டும். மேலும் திருக்குர்ஆனின் போதனைகளுக்கு ஏற்ப

அமல் செய்வதற்கு ஓர் உறுதியான எண்ணம் கொண்டுவிட்டால் பின்னர் எங்கு நாம் ஆன்மிகத்தில் முன்னேற்றம் அடைந்து கொண்டிருப்போமோ அங்கு நமது சமூகமும் சொர்க்கத்தைப் போன்ற ஒரு சமூகமாக மாறிவிடும். மேலும் வீடுகளிலும், குடும்பங்களிலும் பல்வேறு நேரங்களிலும் உருவாகிக் கொண்டிருக்கும் சண்டைகள், அன்பு மற்றும் நேசத்தில் மாறிவிடும்.

அடுத்து, இறை ஷரீஅத்தின் விதை திருக்குர்ஆனின் காலத்தில் தனது உச்சத்தை அடைந்துவிட்டது என்ற விஷயத்தை விவரித்தவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

நன்மைகளை ஏவுதல் மற்றும் தீமைளை தடுத்தல் என்ற விஷயத்தில் திருக்குர்ஆன் முழுமையானதாகும். அதாவது என்ன செயல்களை செய்ய வேண்டுமோ அவற்றை செய்வதற்கான போதனையிலும் மேலும் எந்தப் பணிகள் தடுக்கப்பட்டுள்ளனவோ அவை தொடர்பாக எடுத்துரைப்பதிலும் திருக்குர்ஆன் முழுமையானதாகும். என்ன செய்ய வேண்டும்? என்ன செய்யக் கூடாது? என்பதை முழுமையான முறையில் எடுத்துரைத்துவிட்டது.

மனிதனின் இயல்பில் உச்சபட்சமாக எந்த அளவிற்கு என்னவெல்லாம் சீர்கேடு தோன்ற முடியுமோ, மேலும் வழிகேடு மற்றும் தீய நடத்தைகள் எனும் மைதானத்தில் எந்த அளவிற்கு அவனால் முன்னேற முடியுமோ அந்த அனைத்து விஷயங்களுக்கும் திருக்குர்ஆன் மூலமாக சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும் என்றே இறைவன் எண்ணம் கொண்டுள்ளான். மனித குலத்தில் இந்த அனைத்து சீர்கேடுகளும் உருவாகி இருந்தபோது அவன் திருக்குர்ஆனை இறக்கினான். மெல்ல, மெல்ல மனித நிலையானது எல்லா வகையான தீய கொள்கை மற்றும் தீய நடத்தைகளால் மாசடைந்திருந்தது.மேலும் அதுபோன்ற நேரத்தில் தனது வேதம் அருளப்பட வேண்டும் என்பதே இறைஞானத்தின் தேட்டமாக இருந்தது. ஏனெனில், சீர்கேடுகள் உருவாகுவதற்கு முன்னர் இவற்றிலிருந்து முற்றிலும் அறியாதவர்களாக இருக்கும் மக்களுக்கு இந்த குற்றங்கள் மற்றும் தீய கொள்கையைக் குறித்து அறிவித்துக் கொடுத்தால் அது ஒருவகையில் அவர்களை பாவங்களின் பக்கம் சுயமே ஈடுபடச் செய்யக்கூடியதாக இருக்கும். அதாவது எவர்கள் அந்தப் பாவங்களை குறித்து அறியாமல் இருக்கின்றார்களோ மேலும் அதைப் பற்றிய எண்ணமே இல்லாமல் உள்ளனரோ அவர்களிடம் இவை இவையெல்லாம் பாவம் ஆகும் என்று முன்னரே கூறுவதால் பின்னர் அதன் மூலம் பாவம் பரவுகின்றது. இன்றைய நாட்களில் நாம் இதனையே பார்க்கின்றோம். கல்வித் துறையில் குழந்தைகளுக்கு பாலியல் தொடர்புகள் குறித்து எப்படிப்பட்ட விஷயங்கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன என்றால் அவற்றைக் குறித்து குழந்தைகளுக்கு எந்த எண்ணமும் இருப்பதில்லை. அவர்களோ பதற்றமும், ஆச்சரியமும் அடைகின்றனர். இது என்ன கற்றுக் கொடுக்கப்படுகின்றது? என்று பெற்றோர்களும் கூறத் தொடங்கிவிட்டனர். இன்னும்கூறப்போனால், இதனை கருத்தில் கொண்டவாறு கல்வித் துறையும் நோட்டீஸ் வழங்கியுள்ளது. சில ஆசிரியர்கள் மிகவும் எல்லை கடந்து சென்றுவிட்டனர். பருவமடைந்த வயதை அடைந்தவர்களுக்கு மட்டுமே தெரிந்திருக்க வேண்டிய விஷயங்கள் சுயமே அவர்களுக்கு முன்னரே தெரிவிக்கப்படுகின்றன. இதுவே இயற்கைச் சட்டத்திற்கும் மனித சட்டத்திற்கும் உள்ள வித்தியாசம் ஆகும். சட்டம் மற்றும் திருக்குர்ஆன் வழிகாட்டல்களில் உள்ள வேறுபாடு இதுவே ஆகும். அதாவது இன்ன வயதினருக்கு இன்ன வழிகாட்டல் மற்றும் இன்ன வயதினருக்கு இன்ன வழிகாட்டல் என்று திருக்குர்ஆன் வழிகாட்டல் வழங்கி தெளிவுபடுத்தியுள்ளது. எல்லா விஷயங்களையும் வெளிப்படையாக திறந்து எடுத்துரைத்துவிடவில்லை. பின்னர் திருக்குர்ஆன் விளக்கவுரைகளும் ஒவ்வொருவரின் அறிவு மற்றும் புரிதலுக்கேற்ப மெல்ல மெல்ல அதே சொற்களில் வெளிப்பட்டுக் கொண்டே வருகின்றன.

ஆக அன்னார் (அலை) கூறினார்கள்: எனவே இறைவனின் வஹீ ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களிடமிருந்து விதையைப் போன்று ஆரம்பமானது. மேலும் இறைவனின் ஷரீஅத் எனும் அந்த விதை திருக்குர்ஆனின் காலத்தில் தனது உச்சத்தை அடைந்து ஒரு பெரும் மரத்தைப் போன்று ஆகிவிட்டது. (சஷ்மாயே மஃரிஃபத், ரூஹானி கஸாயீன் தொகுதி 23, பக்கம் 219- 220)

எனவே எவ்வாறு தீமைகள் பரவிக் கொண்டே இருக்கின்றனவோ அவற்றிற்கான சிகிச்சையும் காலத்திற்கேற்ப வெளிப்பட்டுக் கொண்டே இருந்தது. மேலும் திருக்குர்ஆனின் போதனையில் இந்த சிறப்பும் உள்ளது. அதாவது, எல்லாக் காலத்திலும் என்னென்ன தீமைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றனவோ அவற்றிற்கான சிகிச்சையும் இதே போதனையில் கிடைத்துவிடுகின்றது. அவை நமக்கு திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் மூலமாக, அல்லாஹ்வின் நல்லடியார்கள் மூலமாக தெரிய வருகின்றது.

அடுத்து, அன்னார் (அலை) கூறினார்கள்: முழுமையான வேதம் வந்து முழுமையான சீர்திருத்தத்தை செய்ய வேண்டியது இருந்தது. ஒவ்வொரு நோய்க்கும் முழுமையான சிகிச்சை கிடைப்பதற்காக அது இறங்கும் நேரத்தில் அது இறங்கும் இடத்தில் நோயும் முழுமையான முறையில் இருப்பது அவசியமானதாக இருந்தது. ஆக, அந்தத் தீபகற்பத்தில் நோய் முழுமையான முறையில் இருந்தது.....மேலும் அவர்களிடம் அந்த அனைத்து ஆன்மிக நோய்களும் காணப்பட்டன. அதாவது அரேபியாவில் இருந்தன. அந்த காலத்தில் அல்லது பிற்காலத்தில் அடுத்த தலைமுறைகளுக்கு என்னென்ன நோய் ஏற்பட இருந்ததோ அவை இருந்தன.

இதில் மேலும் விளக்கம் கிடைத்துவிட்டது. அந்த நேரத்தில் என்னென்ன நோய்கள் இருந்தனவோ அல்லது எதிர்கால சந்ததியினரிடத்தில் என்னென்ன நோய்கள் ஏற்பட இருந்தனவோ அவற்றிற்கான போதனை வழங்கப்பட்டுவிட்டது. ஏனெனில் காலம் தொலைவில் சென்றிருக்கவில்லை. மேலும், ஷரீஅத்தும் முழுமையாகிக் கொண்டிருந்தது. எனவே எதிர்காலத்தில் என்ன நிகழமுடியுமோ அவற்றையும் அவையும் விளக்கப்பட்டுவிட்டது. மேலும் நீங்கள் எந்த அளவிற்கு எதுவரை திறக்க வேண்டும் எவ்வாறு அது உங்களுக்கு திறக்கப்படும் என்றும் கூறப்பட்டுவிட்டது. மேலும் திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் அதேபோன்று காலத்திற்கு ஏற்ப விளக்கமளித்துக் கொண்டே சென்றுவிட்டனர். கூறினார்கள்: இதுவே காரணமாக இருந்தது. அதாவது திருக்குர்ஆன் முழு ஷரீஅத்தையும் முழுமை செய்துள்ளது. மேலும் மற்ற வேதங்கள் இறங்கும் நேரத்தில் இந்த தேவை இருந்திருக்கவில்லை. மேலும் அவற்றில் இதுபோன்ற முழுமையான போதனையும் இருக்கவில்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 38, 1984 ஆம் ஆண்டு காதியான் பதிப்பு)

காலத்தின் அடிப்படையில் உச்சபட்ச சீர்கேடு உருவாகியிருந்தது என்பதையும், அந்த நேரத்தில் ஒரு ஷரீஅத்தின் தேவை இருந்தது என்பதையும் கிறித்தவர்களும், யூதர்களும் ஒப்புக் கொள்கின்றனர் என்ற விஷயத்தை அன்னார் (அலை) இங்கு நிரூபணம் செய்துள்ளார்கள்.

திருக்குர்ஆன் ஒருபோதும் ஒரு மனித கூற்றுடன் ஒப்புமை கொண்டதாக இருக்க முடியாது என்பதை எடுத்துரைத்தவாறும், அதனை புரிய வைத்தவாறும் உதாரணம் வழங்கிவாறும் அன்னார் (அலை) இவ்வாறு கூறுகின்றார்கள்: சில பேச்சாளர்கள், இலக்கியவாதிகள் தத்தமது அறிவாற்றலின் அழுத்தத்துடன் ஒரு கட்டுரையை எழுத விரும்பினால், நன்றாக பேசக்கூடியபவர்கள், நன்றாக எழுதக்கூடியவர்கள் தமது அறிவாற்றலின் மூலமாக கட்டுரை எழுத விரும்பினால், வீணான, பொய்யான, தேவையற்ற ,அபத்தமான, ஏளனமான, பயனற்ற விஷயங்களையும் குழப்பமான வார்த்தைகளையும், மற்ற அனைத்து ஞானமற்ற, முழுமையற்ற, தொகுப்பற்ற விஷயங்களையும் விட்டு விலகி தூய விஷயங்களை எழுத வேண்டும். அதாவது கட்டுரை எழுதக்கூடியவர் எல்லா வகையான வீணான விஷயங்கள், பொய்கள் மற்றும் தேவையற்ற விஷயங்கள் அபத்தமான விஷயங்கள், ஏளனம், எள்ளி நகையாடுதல் எல்லாவித பயனற்ற விஷயங்கள் மனிதனுக்கு புரியவே முடியாத சிக்கலான, குழப்பமான விஷயங்கள் நுட்பமற்ற விஷயங்கள், சொற்செறிவற்ற விஷயங்கள் போன்ற அனைத்து வீணான விஷயங்களையும் விட்டுவிட்டு தூய விஷயங்களை எழுத முயற்சிப்பார். எல்லாவித ஒழுக்கமற்ற விஷயங்களிலிருந்தும் விலகி அவரது கட்டுரை பரிசுத்தமானதாக இருக்க வேண்டியது ஒரு நல்ல எழுத்தாளரின் அடையாளமாகும். அது முழுக்க, முழுக்க உண்மை, ஞானம், சொற்செறிவு, வாய்மை, நுட்பம் ஆகியவற்றால் நிறைந்திருக்க வேண்டும். அது தூயதாக இருப்பது மட்டுமின்றி ஞானங்களால் நிரம்பியும் இருக்க வேண்டும். எவர் அறிவாற்றலாலும், விரிவான ஞானங்களாலும், பொதுஅறிவைக் கொண்டும் எழுதுவாரோ அவர் நுட்பமான

அறிவைக் கொண்டவராகவும், எல்லாரையும் விட மேலானவராகவும், கட்டுரை எழுதுவதில் பயிற்சி பெற்றவராகவும் இருப்பாரோ அவர்தான் கட்டுரையாளர்களில் அனைவரையும் விட முதல் தரத்தில் இருப்பார். மிகவும் நல்லவராக இருப்பவர் படித்தவராக இருப்பவர், அறிஞராக இருப்பவர், அனுபவசாலியாக இருப்பவர், அந்த அனைத்து விஷயங்களிலிருந்தும் தூயவராக இருப்பவரால்தான் இந்த தூய கட்டுரையை எழுத முடியும். எவர் தகுதியில் கல்வியில், திறமையில், சிந்தனையில் ,அறிவில், வீழ்ச்சியடைந்திருப்பாரோ மிகவும் கீழே இருப்பாரோ அவர் தம் எழுத்தில் அந்த நபருக்கு சமமாக இருப்பாரா என்ன? எவரிடத்தில் இந்த திறமைகள் இல்லையோ அவரால் அந்த நபருக்கு சமமானவராக இருக்க முடியாதல்லவா?

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: உதாரணமாக ஒரு திறமை வாய்ந்த மருத்துவர் இருக்கின்றார். அவர் உடற்கூற்றியலில் முழுமையான திறமை கொண்டவராக இருக்கின்றார். அதாவது ஒரு மருத்துவர் இருக்கின்றார். அவர் மிகவும் நிபுணத்துவம் பெற்ற மருத்துவர் ஆவார். அவருக்கு மிகவும் திறமை உள்ளது. நீண்டகால பயிற்சியின் விளைவாக நோய்களை கண்டறிதல் மற்றும் நோய்கள் பற்றிய ஆராய்ச்சியின் முழு ஞானமும் உள்ளது. சரியாக நோயை கண்டறிந்து விடுகின்றார். நோய்களைப் பற்றிய சரியான ஞானமும் உள்ளது. இதைத் தவிர பேச்சுக் கலையிலும் தனித்தன்மை வாய்ந்தவராக இருக்கின்றார். அவரிடம் பேச்சுக் கலை என்ற ஒரு கூடுதல் திறமையும் உள்ளது. கவிதை உரைநடை ஆகியவற்றிலும் உயர்வான திறமை உள்ளது. மிகவும் திறமைசாலி புகழத்தக்கவர். நோய் உருவாகும்போது அதன் தன்மை மற்றும் அடையாளங்கள், காரணிகள் குறித்து சொற்செறிவு மிக்க பரந்த உரையாடலில் நன்கு சிறப்பாகவும், மிக சரியாகவும் மிக உறுதியாகவும், சொல் வளத்துடனும் எடுத்துரைப்பார். இவருக்கு எதிரில் மற்றொரு நபர் இருக்கின்றார். அவருக்கு மருத்துவத்துடன் எந்தத் தொடர்பும் இல்லை. அவர் பேச்சாற்றலின் நுணுக்கங்களையும் அறியாதவராக இருக்கின்றார். அவரால் விஷயங்களை எடுத்துரைக்க இயலாது. ஏனெனில், இரண்டாவது நபரான அவரிடத்தில் இந்த சிறப்புகள் காணப்படவில்லை. அறிவுள்ள ஒருவர் அவர் தம் தொழிலும் திறமை பெற்றிருக்கின்றார். அத்துடன் நன்றாக அவரால் எடுத்துரைக்கவும் முடியும். ஆய்வும் செய்து கொண்டிருக்கின்றார். மிகவும் வரையறைக்குட்பட்ட அறிவைக் கொண்டவரால் இவ்விஷயங்கள் அனைத்தையும் அவரால் எடுத்துரைக்க முடியாது. எவ்வாறு இருப்பினும் இவரை விட அவர் உயர்வானவராக இருக்கின்றார்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: அறிவற்றவர் மற்றும் புத்திசாலி ஆகியோரின் உரையாடலில் நிச்சயமாக ஏதேனும் வித்தியாசம் இருக்கும் என்பது மிகவும் வெளிப்படையானதும், எளிதில் புரியக்கூடியதும் ஆகும். மனிதன் கல்வியில் எந்த அளவிற்கு முழுமைத் தன்மையை கொண்டுள்ளானோ அந்த பரிபூரணத் தன்மைகள் அவனுடைய ஞானமிக்க சொற்பொழிவில் நிச்சயமாக தென்படும். தெளிவான கண்ணாடியில் முகம் தென்படுவதைப் போன்று அது தென்படுகின்றது. உண்மை மற்றும் நுட்பத்தை எடுத்துரைக்கும்போது அவரது நாவிலிருந்து வெளிப்படும் அந்த சொற்களின் மூலமாக அவரது கல்வித் தகுதியை கணித்துக் கொள்ள ஓர் அளவுகோல் மனதில் உருவாகின்றது. எந்த விஷயம் பரந்த கல்வியறிவு நிறைவான அறிவு ஆகியவற்றின் ஊற்றிலிருந்து உருவாகிறது என்றும், எந்த விஷயம் குறுகிய நெருக்கடியான இருளான வரையறுக்குட்பட்ட சிந்தனையிலிருந்து உருவாகின்றது என்றும் பார்க்கப்படுகிறது. இந்த இரண்டு விஷயங்களிலும் எந்த அளவிற்கு வேறுபாடு உள்ளது? ஒரு விஷயம் அறிவு மற்றும் ஞானத்தின் ஊற்றாக உள்ளது. மற்றொரு விஷயம் மேலோட்டமான விஷயமாக உள்ளது. அவற்றில் தெளிவான வேறுபாடு தெரிந்து விடுகின்றது.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: வேறுபாடு தெளிவாகிவிடுகிறது. ஏதேனும் இயல்பான அல்லது தற்காலிகமான துன்பத்தால் நுகர்வு ஆற்றலில் உணர்ச்சியற்ற தன்மை உருவாகாத வரை நறுமணம் மற்றும் துர்நாற்றத்திற்கும் வேறுபாடு தெளிவானதாகும். நீங்கள் விரும்பும் அளவிற்கு சீர்தூக்கிப் பார்த்துக் கொள்ளுங்கள். எந்த அளவிற்கு விரும்புவீர்களோ சிந்தித்துக் கொள்ளுங்கள். இந்த உண்மைத்துவத்தில் எந்த குறைபாட்டையும் நீங்கள் காணமாட்டீர்கள். இது மிகப் பெரிய உண்மையான விஷயம் ஆகும். எந்த தரப்பிலும் எவ்வித குறைபாடையும் பார்க்க மாட்டீர்கள். எனவே ஞானம் மற்றும் அறிவார்ந்த ஆற்றல்களில் எந்த வித்தியாசம் மறைந்துள்ளதோ அது நிச்சயமாக உரையாடலில் வெளிப்பட்டுவிடுகின்றது என்பது எல்லா வகையான காரணிகளாலும் நிரூபணம் ஆகியுள்ளது. அறிவுப்பூர்வமாகவும், கல்வி ரீதியாகவும் எவர்கள் மேலானவர்களாகவும், உயர்ந்தவர்களாகவும் இருக்கின்றார்களோ அவர்கள் எடுத்துரைக்கும் பொருட்செறிவிலும், உயரிய கருத்துகளிலும் பிற மக்களைப் போன்று இருப்பது சாத்தியமற்ற விஷயம் ஆகும். எவ்வாறு இருப்பினும், அறிவு மற்றும் ஞானம் கொண்டவர்கள் உயர்ந்துதான் இருப்பார்கள். அவர்கள் ஒரு சாதாரண நபருக்கு சமமானவராக இருக்க முடியாது. அவர்களுக்கிடையில் எந்த வித்தியாசமும் இல்லாமல் இருக்க முடியாது. எந்தக் கூற்று இறைவனின் கூற்றாக இருக்குமோ அது மனிதக் கூற்றை விட வெளிப்படையான மற்றும் மறைமுகமான முழுமைத் தன்மையில் மேலானதாகவும், உயர்வானதாகவும் நிகரற்றதாகவும் இருக்க வேண்டியது அவசியம் ஆகும்.

ஆக, இந்த உதாரணத்தின் மூலம் நிரூபணம் ஆகுவது என்னவென்றால் அல்லாஹ்வின் கூற்று அந்த அனைத்தையும் விட மேலானதாகும். அல்லாஹ்தான் அனைத்து ஞானங்களையும் சூழ்ந்துள்ளான். அவனுக்கு இருக்கும் ஞானம் வேறு எவருக்கும் கிடையாது. ஏனெனில், இறைவனுடைய முழுமையான ஞானத்திற்கு எதிரில் வேறு எவருடைய அறிவும் சமமானதாக இருக்க முடியாது. இதைக் குறித்து சுட்டிக் காட்டியவாறு அல்லாஹ் கூறுகின்றான்:

فَاِلَّمْ يَسْتَجِيْبُوْا لَكُمْ فَاعْلَمُوْٓا اَنَّمَآ اُنْزِلَ بِعِلْمِ اللّٰهِ

அதாவது நிராகரிப்பாளர்களால் திருக்குர்ஆனிற்கு ஒப்பானதை எடுத்து வைக்க இயலவில்லையென்றால் மேலும் அவர்கள் போட்டியிட இயலாதவர்களாக இருக்கின்றனர் என்றால், இவ்வேதம் மனித அறிவால் அல்ல. மாறாக இறை ஞானத்தால் இறக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

நிகரானதை எடுத்து வைக்கவே முடியவில்லை என்றால் பிறகு இது மனிதக் கூற்று அல்ல. மாறாக இறைக் கூற்று என்பது வெளிப்படை ஆகும். அவனுடைய பரந்த முழுமையான ஞானத்திற்கு எதிரில் மனித அறிவு உண்மையற்றதும், அற்பமானதும் ஆகும். இந்த வசனத்தில், தாக்கத்திற்கு உள்ளாகும் இருப்பை தாக்கத்தை ஏற்படுத்தும் இருப்பிற்கான சான்றாக ஆக்கப்பட்டுள்ளது.

கூறுகின்றார்கள்: வேறு சொற்களில் அதன் சுருக்கமான பொருள் என்னவென்றால், இறைவனின்ஞானம் தனது முழுமை மற்றும் தொகுப்பு ஆகியவற்றில் மனிதனுடைய குறைபாடுடைய அறிவிற்கு ஒருபோதும் ஒப்பானதாக இருக்க முடியாது. இன்னும் கூறுவதாயின் மேலும் எந்தக் கூற்று அந்த முழுமையான மற்றும் நிகரற்ற ஞானத்திடமிருந்து வெளிப்பட்டதோ அதுவும் முழுமையானதாகவும், நிகரற்றதாகவும் மேலும் மனித கூற்றுகளிலிருந்து முற்றிலும் தனித் தன்மைவாய்ந்ததாகவும் இருப்பது அவசியம் ஆகும். எனவே இந்த முழுமைத்தன்மையே திருக்குர்ஆனில் நிரூபணம் ஆகியுள்ளது. (பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானீ கஸாயீன், தொகுதி 1, பக்கம் 216 - 240)

எனவே எல்லா வகையிலும் முழுமையானதாக இருப்பதற்கான வாதம் திருக்குர்ஆனுடையது ஆகும். வேறு எந்த ஒரு வேதமும் அதற்கெதிரில் நிற்க முடியாது. இதுவரை வரவுமில்லை. இனி வரப்போவதுமில்லை.

கூறுகின்றார்கள்: ஞானங்களின் படித்தரங்களுடன் செயல்களின் படித்தரங்களின் முழுமைத் தன்மை வரை திருக்குர்ஆன் மட்டுமே சென்றடையச் செய்கின்றது. அறிவு மற்றும் செயல் இரண்டு விஷயங்களிலும் உச்சத்தை அடையச் செய்கின்றது. கூறினார்கள்: திருக்குர்ஆன், ஞானங்களின் படித்தரங்களின் உயர்ந்த அந்தஸ்தில் உச்சத்தை அடையச் செய்வதைப் போன்றே செயல்களின் படித்தரங்களின் முழுமைத் தன்மைகளும் அதன் மூலமாகவே கிடைக்கின்றன. எந்த மக்கள் இந்த பரிசுத்தமான வேதத்தின் பின்பற்றுதலை மேற்கொண்டுள்ளார்களோ அவர்களிடமே ஏக இறைவனின் அடையாளங்களும், ஒப்புக் கொள்ளப்படுதலின் ஒளிகளும் வெளிப்பட்டு வந்துள்ளன. தற்போதும் வெளிப்படுகின்றன. (அவர்களைத் தவிர) மற்றவர்களிடம் ஒருபோதும் வெளிப்படுவதில்லை. எனவே உண்மையைத் தேடுபவருக்கு இதுவே

சான்றாகும். இதனை அவர் சுயமே கண்கூடாக ஆய்வு செய்து கொள்ள முடியும். மேலும் இது போதுமானதாகும். அதாவது, விண்ணின் அருட்களையும், இறை அடையாளத்தையும் திருக்குர்ஆனை முற்றிலும் பின்பற்றக்கூடியவர்கள் மட்டுமே பெறுகின்றனர். (பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானி கஸாயீன், தொகுதி 1, பக்கம் 351 - 352, அடிக்குறிப்பு எண்: 11)

திருக்குர்ஆனை முழுமையாக பின்பற்றினீர்கள் என்றால் பின்னர் அடையாளங்களும் காணக் கிடைக்கும். எங்களுக்கு தென்படவில்லை அல்லது இவ்வளவு காலம் துஆ செய்திருந்தோம்; ஆனால் துஆ ஒப்புக் கொள்ளப்படவில்லையே என்று மக்கள் அடையாளங்களைப் பற்றி கேட்கின்றனர். அதற்கு, எனது கூற்றையும் கேளுங்கள். என் மீதான ஈமானையும் முழுமை செய்யுங்கள். எனது கூற்றுகளின்படி அமல் செய்யுங்கள் என்று அல்லாஹ் கூறியுள்ளான். இவை இருக்கும்போது பின்னர் அல்லாஹ் துஆக்களையும் கேட்கின்றான்.

எனவே திருக்குர்ஆன் போதனையின்படி முழுமையாக அமல் செய்யக்கூடியவர்களே அசாதாரண அருட்களை பெறக்கூடியவர்களாக இருக்கின்றனர் என்பதும் திருக்குர்ஆன் போதனையின் சிறப்பம்சம் ஆகும்.

அன்னார் (அலை)கூறினார்கள்: திருக்குர்ஆன் முழுமையான சாரம்சத்தால் மார்க்கத்தின் அனைத்து உண்மைத்துவங்களையும் சூழ்ந்துள்ளது. இஃஜாஸ் என்பதன் பொருள் அற்புதம் அல்ல. அலிஃப், ய, ஜீம் ஆகிய சொற்களால் ஆனது ஆகும். கருத்தின் சுருக்கம் என்பது அதன் பொருள் ஆகும்.

அதனை எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: ஃபுர்கானே மஜீத் தனது சொற்செறிவையும், பொருட்செறிவு உண்மை, நுட்பமான ஞானம், மற்றும் அவசியமான உண்மைகள் ஆகியவற்றால் உரிய முறையில் நிறைவேற்றியுள்ளது. மேலும் உயர்தரமான சாரம்சத்துடன் அனைத்து மார்க்க உண்மைத்துவங்களையும் வரையறுத்து காட்டியுள்ளது. ஆக, அதில் ஒவ்வொரு எதிரியையும், நிராகரிப்பாளரையும் வாயடைக்கச் செய்வதற்காக தெள்ளத் தெளிவான ஆதாரங்கள் நிறைந்திருக்கின்றன. நம்பிக்கையாளர்களின் உறுதியை முழுமை செய்வதற்காக ஆயிரக்கணக்கான உண்மைகளின் ஓர் ஆழமான மற்றும் தெளிந்த நதி அதில் ஓடுவதாக தென்படுகின்றது. எந்த விவகாரங்களில் குழப்பத்தை கண்டதோ அவற்றின் சீர்திருத்திருத்திற்காகவே அழுத்தம் கொடுத்துள்ளது. எந்த அளவு தீவிரத்துடன் ஒரு மிகைப்படுத்துதல் அல்லது குறைவு செய்தல் மீது ஆதிக்கம் பெற்றுள்ளதோ அதே தீவிரத்துடன் அதனை தடுத்து நிறுத்தியும் உள்ளது. எந்த வகையான நோய்கள் பரவியிருப்பதை கண்டதோ அவை அனைத்தின் சிகிச்சையையும் எழுதியுள்ளது. பொய் மார்க்கங்களின் எல்லா சந்தேகங்களையும் அழித்துவிட்டது. அதாவது பொய் மார்க்கம் என்ன கேள்விகளை எழுப்புகின்றதோ அவற்றையும் மேலும், அவற்றில் இருக்கும் ஐயங்களையும் அழித்துவிட்டது. தவறான விஷயங்களை அழித்துவிட்டது. ஒவ்வொரு ஆட்சேபனைக்கும் பதில் கொடுத்துள்ளது. அது எடுத்துரைக்காத எந்த உண்மைத்துவமும் இல்லை. அது மறுப்பு வழங்காத எந்தவொரு வழிதவறிய பிரிவும் இல்லை. அதாவது வழிதவறிய மக்களின் நிலைகளை மறுக்கும் விஷயங்களை எழுதியுள்ளது. மிகவும் தெள்ளத் தெளிவாக ஒவ்வொரு கட்டளையும் உள்ளது.

அடுத்த ஒரு சிறப்பு என்னவென்றால் தேவையில்லாமல் எழுதப்பட்ட எந்த வார்த்தையும் இல்லை. தேவையின்றி எந்த விஷயமும் இல்லை. எந்த ஒரு விஷயமும் பொருத்தமற்ற இடத்தில் எடுத்துரைக்கப்படவில்லை. வீணான முறையில் எழுதப்பட்ட எந்த ஒரு சொல்லும் காணக் கிடைக்காது. பின்னர் புகழுக்குரிய அமைப்புடன் இந்த அனைத்து விவகாரங்களிலும் சொற்செறிவின் எப்படிப்பட்ட உயர் அந்தஸ்தை காட்டியுள்ளது என்றால் அதை விட அதிகமாக சிந்தித்து பார்க்க முடியாது. அனைத்து விஷயங்கயையும் சூழ்ந்து (Cover செய்து) விட்டது. மேலும் சுருக்கமாக எடுத்துரைத்து விட்டது. ஆயினும், இதை விட சொற்செறிவும், கருத்துச் செறிவும் இருக்கவே முடியாது. கருத்துச் செறிவை எந்த உயர்நிலை வரை எட்டச் செய்துள்ளது என்றால், உயர்வான அழகிய வரிசைக் கிரமத்தாலும், சாரம்சம் மற்றும் சான்றுகளால் நிரூபணம் ஆன கூற்றுகளால் முன்னவர்கள் மற்றும் பின்னவர்களைப் பற்றிய அறிவை ஒரு சிறிய நூலில் நிறைத்துவிட்டது. முன்னவர்களுக்கும் ஞானம் இருந்தது. முன்னரும் உதாரணம் கொடுத்துவிட்டேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: கிராமப்புறங்களில் வசிக்கக்கூடிய அரேபியாவின் காட்டரபிகள் இருந்தனர். அவர்களுக்கும் திருக்குர்ஆன் புரிந்துவிட்டது. மேலும், அவர்கள் இறையடியார்களாக ஆகிவிட்டனர். கல்வி கற்ற மனிதராக ஆகிவிட்டனர். மேலும் அறிவு படைத்த மக்களுக்கு அவர்களின் அறிவிற்கேற்ப புரிந்துவிட்டது. அடுத்து அவர்களோடு நின்றுவிடவில்லை. முன்னவர்கள் மற்றும் பின்னவர்கள் வரையும் புரிந்துவிட்டது. பின்னவர்களுக்கும் திருக்குர்ஆன் போதனை எப்படிப்பட்டதாக உள்ளது என்றால், அதனுடைய விளக்கவுரையின் ஒவ்வொரு சொல்லும் எல்லாக் காலத்திலும் ஒரு புதிய பொருளை வெளிப்படுத்திக் கொண்டே செல்கின்றது. அவை காலத்தின் தேவைக்கேற்ப நமக்கு தெரிய வந்து கொண்டே இருக்கின்றன.

அன்னார் (அலை) கூறினார்கள்:

ஒரு சிறிய அளவிலான நூலில் நிறைத்துவிட்டான். ஏனெனில், மனிதனின் ஆயுள் குறைவானதாகவும், பணிகள் ஏராளமானதாகவும் உள்ளன. எனவே எண்ணற்ற வேதனைகள் அவனிடமிருந்து அகன்றுவிட வேண்டும் என்பதற்காகவும், இஸ்லாத்தை இந்த கருத்துச் செறிவுடன் பரப்புகின்ற விவகாரத்தில் உதவி கிடைப்பதற்காகவும், மனனம் செய்வதும், நினைவில் வைப்பதும் எளிதாக இருக்க வேண்டும் என்பதற்காகவும் இறைவன் அவ்வாறு செய்துள்ளான்.

(பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானீ கஸாயின், தொகுதி 1, பக்கம் 451 -456, அடிக்குறிப்பு எண்: 3)

திருக்குர்ஆனை மக்கள் மனனமும் செய்துவிடுகின்றனர். குழந்தைகள் சிறிய வயதில் செய்துவிடுகின்றனர்.

திருக்குர்ஆன் மட்டுமே தனது வாக்கியங்களின் அடிப்படையிலும், மொழியின் அடிப்படையிலும் வேறு எங்கும் இல்லாத உண்மைத்துவத்தை எடுத்துரைக்கின்றது. இன்ஜீல் போன்ற வேதங்கள் மனித கையாடலின் காரணமாக தற்போது இறை வேதமாக இருக்கவில்லை என்ற விஷயத்தை அன்னார் (அலை) தமது பராஹீனே அஹ்மதிய்யா எனும் நூலில் நிரூபணம் செய்துள்ளார்கள்.

பின்னர், திருக்குர்ஆன் சிறப்பு மிகு சாராம்சமான வேதமாக இருப்பதை மற்றோரிடத்தில் எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நீதிமான் ஒருவர் திருக்குர்ஆனை பார்த்தால், திருக்குர்ஆனில் சுருக்கமான கூற்றில் அவசியமான கருத்துச் செறிவின் உயர்நிலையை இறைவன் காட்டியுள்ளான் என்பது அவருக்கு உடனடியாக தெரிய வரும்.

அதாவது சிறிய அளவிலான சுருக்கமான வார்த்தைகளிலும், தெளிவான கூற்றுகளிலும் உச்சத்தை அடைந்துவிட்டது. அவசியமான மார்க்கத் தேவைகள் அனைத்தையும் உள்ளடக்கியதாக இருந்தபோதிலும் அனைத்து சான்றுகளும், ஆதாரங்களும் தொகுப்பாக பெரும் எண்ணிக்கையில் உள்ளன என்றால், மனிதன் சில மணி நேரங்களில் ஆரம்பம் முதல் இறுதி வரை மிக எளிதாக ஓதிவிட முடியும். எந்த அளவிற்கு சுருக்கமான சொற்கள் உள்ளன என்றால் அதனை மனிதன் நிதானமாக ஓதிவிட முடியும். திருக்குர்ஆனின் இந்த சொற்செறிவு எந்த அளவிற்கு வலிமை மிக்க அற்புதமாக உள்ளது என்று பாருங்கள்! அலை வீசும்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

S.S.H. Muhammed Lebbai (Ameer, Melapalayam)

A. Nasir Ahmad (District Ameer, Melapalayam)

A. Shamsul Alam (Gen.Sec. Melapalayam)

ஞானத்தின் கடலை மூன்று நான்கு பாகங்களில் உள்ளடக்கி காட்டிவிட்டது. ஞானத்தின் ஓர் உலகத்தை சில பக்கங்களில் நிறைத்துவிட்டது. எல்லாக் காலங்களின் உண்மைத்துவத்தையும் உள்ளடக்கிய இந்த அளவிற்கு சிறிய மற்றும் தொகுப்பை கொண்ட வேதத்தை எப்போதாவது எவராவது கண்டார்களா? அல்லது செவிமடுத்தார்களா? இதற்கு வெளியே மார்க்கத்தின் எந்தவோர் உண்மையும் இல்லாத அளவிற்கு குறைவான சொற்களில் ஞானத்தின் ஒரு நதியை நிரப்பிவிடும் அளவிற்கு ஓர் அறிவாளியின் அறிவு மனிதர்களுக்காக எடுத்துரைக்க முடியுமா என்ன? (பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானீ கஸாயீன், தொகுதி 1, பக்கம் 526 - 527, அடிக்குறிப்பு எண்: 3)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இங்கு இந்துக்களின் வேதத்தை ஒப்பிடுகின்றார்கள். மேலும் திருக்குர்ஆனில் இருப்பது போன்ற விஷயங்கள் (அந்த) வேதத்தில் இல்லை. மேலும் அ(ந்த வேதத்)தில் உள்ள நீண்ட, நெடிய வாக்கியங்களை படிப்பதே கடினமாகும் என்ற விஷயத்தை நிரூபணம் செய்துள்ளார்கள்.

வாருங்கள்! இந்த அனைத்து சிறப்புகளையும் நான் உங்களுக்கு திருக்குர்ஆனிலிருந்து காட்டுகின்றேன் என்று அன்னார் (அலை) எல்லா மார்க்கத்திற்கும் அறைகூவல் விடுத்தார்கள். இவ்வாறு உலகிற்கு சவால் விடுத்தவர் அக்காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை தவிர வேறு எவரும் இருக்கவில்லை. அவ்வாறிருந்தும் நாம் நவூதுபில்லாஹ் திருக்குர்ஆனை நிந்தனை செய்யக்கூடியவர்கள் ஆவோம் என்று நம் மீது பழிசுமத்தப்படுகிறது.

திருக்குர்ஆனின் காலம் முழுமையான போதனைக்கு தேவையுடைய காலமாக இருந்தது.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: திருக்குர்ஆன் மட்டுமே முழுமையான போதனையை நல்கியுள்ளது. மேலும் திருக்குர்ஆனின் காலமே எப்படிப்பட்ட காலமாக இருந்தது என்றால் அதில் முழுமையான போதனை அருளப்படுவதற்குரிய காலமாக இருந்தது. இதைக் குறித்து சில குறிப்புகளை முன்னர் எடுத்துரைக்கப்பட்டுவிட்டது. முழுமையான போதனைக்கான இந்த வாதத்தை திருக்குர்ஆன் செய்துள்ளது என்றால் அதற்கே அந்த உரிமை இருந்தது. அதனை தவிர வேறு எந்த விண்ணின் வேதமும் அப்படியொரு வாதத்தை செய்யவில்லை.

(பராஹீனே அஹ்மதிய்யா, தொகுதி 1, பக்கம் 4 - 21)

அன்னார் (அலை) கூறினார்கள்: எவர் திருக்குர்ஆனை உண்மையாக பின்பற்றுவாரோ மேலும் திருக்குர்ஆனை மட்டுமே காத்தமுல் குதுப் என்று நம்பிக்கை கொள்வாரோ அவரே எமது பார்வையில் நம்பிக்கையாளர் ஆவார். இது நம்பிக்கையாளரின் அடையாளம் ஆகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உலகிற்கு கொண்டு வந்த இந்த வேதத்தையே என்றென்றும் நிலைபெறக் கூடியதாக நம்பிக்கை கொள்ள வேண்டும். மேலும், ஓர் அணு அளவு கூட, ஒரு புள்ளியை கூட மாற்றக் கூடாது. மேலும், அவர் அதனை பின்பற்றுவதில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு தம்மை மாய்த்துக் கொள்ள வேண்டும். மேலும் தமது இருப்பின் ஒவ்வோர் அணுவையும் அதன் வழியிலேயே ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். செயல்ரீதியாகவும், அறிவு ரீதியாகவும் அவனது ஷரீஅத்தை எதிர்க்கக் கூடாது. அப்போது அவர் உறுதியான முஸ்லிமாக இருக்கின்றார். (மல்ஃபூஸாத், தொகுதி 10, பக்கம் 267, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

தற்போது நாம் நம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டிய அவசியம் உள்ளது.

திருக்குர்ஆன் இறுதி வேதமாக இருப்பது தொடர்பாக அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: திருக்குர்ஆன் எப்படிப்பட்ட காலத்தில் இறங்கியது என்றால் அந்தக் காலத்தில் எல்லா வகையான தேவைகளும் இருந்தன. எவையெல்லாம் வெளிப்படுவது அசாத்தியமானதாக இருந்ததோ அவையெல்லாம் வெளிப்பட்டன. அதாவது ஒழுக்கம், கொள்கை, சொல் மற்றும் செயல் ரீதியிலான அனைத்து விவகாரங்களும் சீர்கெட்டு இருந்தன. மேலும், எல்லா வகையான (வரம்பு மீறிய) மிகைப்படுத்துதல், (எல்லை கடந்து) குறைவு செய்தல் மற்றும் அனைத்து விதமான குழப்பம் ஆகிய விஷயங்கள் தனது உச்சத்தை அடைந்திருந்தன. எனவே திருக்குர்ஆன் போதனையும் உன்னதமான அந்தஸ்தில் இறங்கியது. எனவே இந்த அர்த்தங்களின் அடிப்படையில் ஃபுர்கானிய ஷரீஅத் (அதாவது திருக்குர்ஆன்) முழுமையானதாகவும், நிறைவானதாகவும் திகழ்கின்றது. மேலும் முந்தைய ஷரீஅத்துகள் குறைபாடுடையதாக உள்ளன. ஏனெனில், முந்தைய காலங்களில் எந்த குழப்பங்களின் சீர்திருத்தத்திற்காக அந்த இல்ஹாமிய வேதங்கள் வந்தனவோ அந்த குழப்பங்கள் உச்சத்தை அடைந்திருக்கவில்லை. ஆனால், திருக்குர்ஆனின் காலத்தில் அந்த அனைத்து விவகாரங்களும் தமது உச்சத்தை அடைந்திருந்தன. ஏராளமான பிள்ளைகள் அல்லது இளமைப் பருவத்தில் அடியெடுத்து வைக்கக்கூடிய மக்கள் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கின்றனர். இது அவர்களுக்கான பதில் ஆகும். அதாவது முன்னர் அந்த விவகாரங்கள் உச்சத்தை அடைந்திருக்கவில்லை. இங்கு விவகாரங்கள் உச்சத்தை அடைந்துவிட்டன. எனவே திருக்குர்ஆன் இறங்கியது. அதனால்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் மூலமாக இஸ்லாத்திற்கான அடித்தளம் அமைந்தது. எனவே தற்போது திருக்குர்ஆன் மற்றும் ஏனைய இல்ஹாமிய வேதங்களுக்கும் இருக்கும் வேறுபாடு இதுதான். அதாவது, முந்தைய வேதங்கள் ஒருவேளை எல்லா வகையான இடைச் செருகலில் இருந்து பாதுகாப்பானதாக இருந்திருந்தாலும் கூட அதன் பின்னரும் ஒரு காலத்தில் முழுமையான போதனை அதாவது ஃபுர்கானே மஜீத் (திருக்குர்ஆன்) இறங்குவதற்கான அவசியம் இருந்தது. அந்த வேதங்களுக்கு முன்னால் சில விவகாரங்கள் வந்திருக்கவே இல்லை. அந்நிலையில் அவற்றை அந்த வேதங்கள் எவ்வாறு எடுத்துரைத்திருக்க முடியும்? அவற்றின் போதனை குறைபாடுடையதாக இருந்தது. எனவே திருக்குர்ஆன் இறங்குவது அவசியமானதாக இருந்தது.

கூறினார்கள்: ஆனால் திருக்குர்ஆனிற்கு இந்த அவசியம் எழவில்லை. அதாவது, அதற்குப் பிறகு வேறு ஒரு வேதம் வருவதற்கான அவசியம் இருக்கவில்லை. ஏனெனில், முழுமைத் தன்மைக்கு பிறகு வேறு ஒரு படித்தரம் எஞ்சியிருக்கவில்லை.

ஆயினும், ஒரு காலத்தில் திருக்குர்ஆனின் உண்மையான போதனைகளை (ஏனைய) வேதம் மற்றும் இன்ஜீலைப் போன்று இணை வைப்பிற்குரிய போதனைகளாக ஆக்கிக் கொள்ளப்படும்; ஏகத்துவ போதனையில் மாற்றங்களும், மாறுதல்களும் செயல்படுத்தப்படும்; திருக்குர்ஆனில் ஏதாவது மாற்றங்களும், மாறுதல்களும் செயல்படுத்தப்படும் அல்லது ஒரு காலத்தில் ஏகத்துவத்தில் நிலைத்திருக்கும் கோடிக்கணக்கான முஸ்லிம்களும் ஷிர்க்கான வழிமுறைகள் மற்றும் படைப்பினங்களை வணங்குதல் ஆகியவற்றை மேற்கொண்டு விடுவார்கள் என்று ஒரு வாதத்திற்காக வைத்துக் கொண்டாலும் கூட பின்னர் அந்நிலையில் நிச்சயமாக வேறு ஷரீஅத் மற்றும் வேறொரு தூதரின் வருகைக்கான அவசியம் ஏற்படும். ஆம், இந்த சூழ்நிலைகள் உருவானால் பின்னர் அது நிகழக்கூடும். மாறாக, நிச்சயமாக நிகழும்.

ஆனால் இவை இரண்டு வகையான கற்பனை விஷயங்கள் ஆகும். இவை ஒரு வாதத்திற்காக கூறப்பட்ட சாத்தியமற்ற விஷயங்கள் ஆகும்.

(பராஹீனே அஹ்மதிய்யா, தொகுதி 1, பக்கம் 101 -102, அடிக்குறிப்பு எண்: 9)

அந்த விஷயம் நடக்கவே முடியாது. ஏனெனில், நான் ஷரீஅத்தை பாதுகாப்பாக வைப்பேன் என்று அல்லாஹ் வாக்குறுதி வழங்கியுள்ளான். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அதே நோக்கத்திற்காகவே அனுப்பியுள்ளான். மேலும் அதுவே நமது பணியும் ஆகும்.

பின்னர் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: அல்லாஹ் மீண்டும்,மீண்டும் கூறுவதைப் போன்று இரட்சிப்பு பெறுவதற்கு இந்த விஷயமே அவசியம் ஆகும். அந்த விஷயம் என்னவென்றால், முதலில் உண்மையான உள்ளத்துடன் அல்லாஹ்வை ஏகனாகவும், இணையற்றவனாகவும் கருதவேண்டும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையான நபியென்று நம்ப வேண்டும். மேலும் திருக்குர்ஆனை அல்லாஹ்வின் வேதமாக கருத வேண்டும். மேலும் திருக்குர்ஆனிற்கு பிறகு கியாமத் வரை இனி வேறு எந்த வேதமோ அல்லது ஷரீஅத்தோ வராது என்றும் நம்ப வேண்டும். அதாவது திருக்குர்ஆனிற்கு பிறகு இனி வேறு எந்தவொரு வேதத்திற்கோ அல்லது ஷரீஅத்திற்கோ அவசியம் இல்லை. (மல்ஃபூஸாத், தொகுதி 6, பக்கம் 236, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

திருக்குர்ஆனின் மேன்மையைக் குறித்து அன்னார் (அலை) எடுத்துரைக்கின்றார்கள்: தம்மால் திருக்குர்ஆனிற்கு நிகரானதை கொண்டு வர

முடியும் என்று வாதம் செய்கின்ற அந்த நபரின் மீது இறைவனின் சாபம் உண்டாகட்டுமாக! திருக்குர்ஆன் அற்புதம் ஆகும். அதற்கு நிகரானதை எந்த மனிதனாலும், ஜின்களாலும் கொண்டு வர முடியாது. மேலும் அதில் எப்படிப்பட்ட ஞானங்களும், சிறப்புகளும் ஒன்றுசேர்ந்துள்ளன. அவற்றை மனித அறிவு ஒன்று கூட்ட முடியாது. இன்னும் கூறப்போனால், அது எப்படிப்பட்ட வஹீ என்றால், அதற்கு நிகரான வேறு எந்த வஹீயும் கிடையாது. இன்னும்கூறப்போனால் அளவற்ற அருளாளனாகிய இறைவன் புறமிருந்து அதன் பிறகு வேறு வஹீ வந்திருந்தும் கூட (அதைப் போன்ற வஹீ இறங்கவில்லை). ஏனெனில், வஹீயை எட்ட வைப்பவரிடத்தில் இறைவனின் வெளிப்பாடுகள் உள்ளன. காத்தமுல் அன்பியா அவர்களிடத்தில் இறைவனின் வெளிப்பாடு நிகழ்ந்ததைப் போன்று முன்னர் வேறு எவர் மீதும் நிகழ்ந்ததில்லை; இனி நிகழப்போவதுமில்லை என்பது உறுதியான விஷயம் ஆகும். மேலும் திருக்குர்ஆனின் வஹீக்கு என்ன மகிமை உள்ளதோ அந்த மகிமை வலிமார்களின் வஹீக்கு கிடையாது. வலிமார்களுக்கும் வஹீ இறங்க முடியும். திருக்குர்ஆனின் வார்த்தைகளைப் போன்ற ஏதாவது வார்த்தை அவர்களுக்கு வஹீயாக இறக்கப்பட்டாலும் கூட அதற்கு அந்த மகிமை இருக்க முடியாது. ஏனெனில், திருக்குர்ஆனின் ஞானங்களின் வட்டம் அனைத்து வட்டங்களையும் விட பெரியதாகும். அதில் அனைத்து அறிவுகளும் எல்லா வகையான வினோதமான மற்றும் மறைவான விஷயங்களும் ஒன்றுசேர்க்கப்பட்டுள்ளன. மேலும், அதன் ஆழிய விஷயங்கள் மிகவும் உன்னதமான அந்துஸ்து கொண்ட ஆழமான இடம் வரை சென்றடைந்துள்ளது. மேலும், அந்த கூற்றிலும், சான்றுகளிலும் எல்லாவற்றையும் விட அதிகமானதாகவும், அதில் மிக அதிகமான இறைஞானமும் உள்ளது. மேலும் திருக்குர்ஆன் இறைவனின் அற்புதமான வேதம் ஆகும். அதற்கு நிகரை காதுகள் கேட்டிருக்கவில்லை. மேலும் மனிதர்கள் மற்றும் ஜின்களின் கூற்றுகள் அதற்கு நிகராக சென்றடைய முடியாது. எனவே திருக்குர்ஆன் மற்றும் ஏனைய வேதத்தின் உதாரணம் ஒரு நீதிமான் மற்றும் உயர்ந்த நெஞ்சுரம் கொண்ட, ஞானம் மிக்க அரசன் கண்ட கனவின் உதாரணம் ஆகும்.

உதாரணம் கூறுவதாக இருந்தால் அந்த உதாரணம் இதுவாகும். அதாவது ஓர் அரசர் ஒரு கனவு கண்டார். அவர் மிகவும் நீதிமானாக இருந்தார். மிகுந்த தைரியம் கொண்டவராக இருந்தார். மேலும் அதே கனவை, சாதாரண, குறை மதி கொண்ட, மற்றும் தைரியமற்ற வேறொரு நபரும் கண்டார். அதாவது அதேபோன்ற மற்றொரு கனவை குறைந்த அந்தஸ்தைக் கொண்ட ஒரு பாமர மனிதரும் காண்கிறார். அவர் சாதாரண மனிதனாக இருந்தார். குறை மதி கொண்டவராகவும் இருந்தார். தைரியமற்றவராகவும் இருந்தார். எனவே அரசரின் கனவும், அந்த பாமரனின் கனவும் வெளிப்படையில் ஒன்றாகவே உள்ளது. அதனைப் போன்ற கனவாக உள்ளது. ஆனால், அறிஞர் மற்றும் கனவு விளக்கம் அளிப்பவர் பார்வையில் அது இரண்டும் ஒன்றல்ல. கனவுகளுக்கு விளக்கம் அளிக்கக்கூடிய அறிவு படைத்த மனிதர், இது இரண்டும் ஒரே கனவல்ல என்று கூறுவார். இன்னும் கூறப்போனால், நீதிமான் ஆன அரசனின் கனவு மிகவும் உயர்ந்ததும், பொதுவானதும், நன்மை பயக்கக்கூடியதும், மேலும் அனைத்து மக்களுக்கும் நன்மை மற்றும், அருட்களை கொண்டதாகவும், மிகவும் சரியானதாகவும், தெளிவானதாகவும் உள்ளது. அந்த கனவிற்கு மிகவும் விசாலமான வட்டம் உள்ளது. ஆனால், பாமரனின் கனவு பெரும்பாலான நிலைகளில் கலப்படமானதாகவும், அழுக்குகள் மற்றும் கந்தல்களிலிருந்து தூயதாகவும் இருப்பதில்லை. அதுமட்டுமின்றி, அதன் தாக்கம் மகன்கள், தந்தைமார்கள் அல்லது சிறிய அளவிலான நண்பர்களின் வட்டத்தை கடந்து செல்வதில்லை. குறுகிய வட்டமாக உள்ளது. அவரது குடும்பம், மகன்கள், தந்தை அல்லது உறவினர்கள் அல்லது நண்பர்கள் என்ற குறுகிய வட்டத்தில் இருக்கும். அந்த கனவு ஏதாவது நன்மை பயக்கக்கூடியது என்றால் அவர்கள் வரை மட்டுமே அது நன்மை பயக்கும்.

கூறினார்கள்: அதில் அந்நியர்களையும் உள்ளடக்கியதாக இருந்தாலும் கூட அதாவது மற்றவர்களையும் அதில் சேர்த்துக் கொண்டாலும் கூட அது குறுகிய அளவில் மட்டுமே இருக்கும். ஆம்! அந்த சாதாரண மனிதரின் கனவில் மற்றவர்களையும் இணைத்துக் கொள்ள முடியும் என்று அவர்களைப் பற்றி மக்கள் கூறுகின்றனர். அவ்வாறு வைத்துக் கொண்டாலும் கூட மிகவும் அருகில் இருக்கும் இடத்திலேயே தங்கிவிடுகின்றார்கள். அந்நிலையிலும் மிக, மிக நெருங்கிய வட்டத்திலேயே இருக்கும். அதாவது எந்த அளவிற்கு அவர் சூழலை அறிவாரோ அங்கு வரையே அதன் தாக்கம் இருக்கும். கூட்டில் இருந்து இறங்கி குடிசையில் சென்று புகுந்து விடுகின்றனர். இது ஒரு பழமொழியாகும். அன்னார் (அலை) கூறினார்கள்: பின்னர் அவர்கள் எல்லைக்குட்பட்டவர்களாக ஆகிவிடுகின்றனர். அவர்களின் விசாலத்தன்மை அந்த அளவிற்கு உரியதாக ஆகவே முடியாது. ஆனால், திருக்குர்ஆனின் சவாரிகளின் நிலை இதுவாகும். அதாவது, அவர்கள் குடியிருப்புகளின் எல்லா வட்டத்தையும் கடந்து சென்றுவிடுகின்றனர். (அதன் வட்டம்) மிகவும் பரந்துபட்டதாகும். திருக்குர்ஆன் ஒரு வேதம் ஆகும். அதன் கீழே இறைஞானத்தின் நதிகள் ஓடுகின்றன. எந்த ஒரு பேசும் பறவையும் அதன் மேலே பறக்க முடியாது. (உவமையாக கூறப்பட்டுள்ளது). அதாவது திருக்குர்ஆனை விட அதிகமாக வேறு எவரும் எடுத்துரைக்கவே முடியாது. ஒவ்வொரு முதலீட்டாளரும் அதனுடைய கருவூலம் மற்றும் புதையல்களிலிருந்து கொஞ்சம் எடுத்துக் கொள்கின்றார். திருக்குர்ஆனிலிருந்து கடன் வாங்காத ஒவ்வொரு பேச்சாளரும் என்னை பொருத்த வரை வெறும் கையை வீசுபவரே ஆவார். அதாவது திருக்குர்ஆனிலிருந்து பயன்பெறவில்லையென்றால் பின்னர் எவருடைய உரையாடலும் சரியான உரையாடலாக இருக்கவே முடியாது. கடனாளியிடமிருந்து பணத்தை வசூல் செய்ய வேண்டும் என்பதற்காக நீதிபதி வரை சென்று கடனாளிகளிடம் கடுமையான கோரிக்கை வைக்கப்படுகின்றது. மேலும் கடுமையான முயற்சி செய்யப்படுகின்றது. ஆனால், திருக்குர்ஆன் வறியவர்களுக்கு தருமம் வழங்குகின்றது. மேலும் அனைத்து கஷ்டங்களையும் அகற்றுகின்றது. இன்னும் கூறப்போனால், தூயவர்களுக்கு தங்கக் கட்டிகளைக் கொடுக்கின்றது.

மற்ற மக்கள் ஒரு பொருளைக் கொடுத்தால் தன்னிடம் கடன் பெற்றவர்களுக்கு எதிராக வழக்குகளை தொடுக்கின்றனர். ஆனால், திருக்குர்ஆன் எப்படிப்பட்ட அறிவை வழங்குகின்றது என்றால், அந்த நபர் அதன் அறிவு மற்றும் ஞானத்தின் ஊற்றுகள் பெருக்கெடுத்துக் கொண்டே செல்கின்றன. இது தங்கக் கட்டிகள் கிடைப்பதைப் போன்றதே ஆகும். தனது கடனாளிகளுக்கு காலக் கெடு கொடுத்து செய்த உபகாரத்தை சுட்டிக் காட்டுவதில்லை. இன்னும்கூறப்போனால், அவர்களுக்கு தங்கங்களை ஒன்றுகூட்டுவதற்கான ஆர்வத்தை ஊட்டுகின்றது.

கூறினார்கள்: நாம் முதலில் குடமாக ஆகினோம். பின்னர் திருக்குர்ஆன் எனும் நதியிலிருந்து தாகத்தை தணித்துக் கொண்டோம். (அல்ஹுதா, ரூஹானீ கஸாயீன், தொகுதி 18, பக்கம் 275 - 278)

எனது நிலையைக் கேட்டீர்கள் என்றால், நான் முதலில் ஒரு குவளையாக ஒரு குடமாக ஆகினேன். பின்னர் திருக்குர்ஆனின் நதிகளின் தண்ணீரிலிருந்து என்னை நானே நிறைத்துக் கொண்டேன். அரபி வாக்கியங்கள் உள்ளன. ஏனெனில், இது கருத்தை விளக்குவதற்காக அதன் ஒரு தொனியில் கூறப்பட்டுள்ளது. மொழியாக்கமும் அவ்வாறே செய்யப்பட்டுள்ளது.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: என்னைப் பொருத்த வரை எவர் திருக்குர்ஆனின் அற்புதத்தை நிராகரிக்கின்றாரோ மேலும் தனது கூற்றையும் அமைப்பையும், தம்மையும் நிரந்தரமான விஷயமாக கருதுகின்றாரோ அத்தகையவர் மீது இறைவனின் சாபம் உள்ளது. மேலும் இறைவனின் மீது ஆணையாக! நாமோ (திருக்குர்ஆன் எனும்) அதே ஊற்றிலிருந்து அருந்துகின்றோம். மேலும் அதன் அழகிலிருந்து எம்மை அலங்கரித்துக் கொள்கின்றோம். அதன் காரணமாகவே எமது கூற்றில் ஒளியும், தூய்மையும் இருக்கின்றது. மேலும் எமது உரையாடலில் ஒளியும், குணமும், புத்துணர்வும், அழகும் ஒளிவீசுகின்றது. என் மீது திருக்குர்ஆனைத் தவிர வேறு எதனுடைய உபகாரமும் இல்லை. அது என்னை எப்படிப் பராமரித்தது என்றால் அதுபோன்று தாய், தந்தையும் கூட பராமரிப்பது கிடையாது. இறைவன் அதிலிருந்து எனக்கு அருமையான தண்ணீரை பருகச் செய்தான். மேலும் நாம் அதனை ஒளிமயமாக்கக் கூடியதாகவும், உதவிபுரியக் கூடியதாகவும் கண்டோம். (அல்ஹுதா, ரூஹானீ கஸாயின், தொகுதி 18, பக்கம் 279)

கூறினார்கள்: என்னுடன்

இறைவனின் எந்த அடையாளமும் இல்லாதிருந்தால், மேலும் அவனது உதவியும், ஆதரவும் எனக்கு கிடைக்காமல் இருந்திருந்தால் மேலும், நான் திருக்குர்ஆனிற்கு வெளியில் ஏதாவது வழியை உருவாக்கிக் கொண்டிருந்தால் அல்லது திருக்குர்ஆனின் கட்டளைகள் மற்றும் ஷரீஅத்தில் ஏதுாவது இடைசெறுகலையும், கையாடலையும் செய்திருந்தால் அல்லது ரத்து செய்திருந்தால் அல்லது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பின்பற்றுதலுக்கு வெளியே ஏதாவது புதிய வழியை கூறியிருந்தால் பின்னர், உண்மையில் இந்த நபர் இறைவன் மற்றும் அவனது தூதரின் எதிரியும் திருக்குர்ஆன் மற்றும் திருக்குர்ஆன் போதனைகளை மறுக்கக் கூடியவரும், ரத்து செய்யக்கூடியவரும் ஆவார் என்று மக்கள் கூறும் கூற்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கும். மேலும், அந்நிலையில் அதற்கு அவர்களுக்கு உரிமையும் இருந்தது. திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கு வெளியிலிருந்து நான் ஏதாவது விஷயத்தை கூறியிருந்தால் பின்னர் நிச்சயமாக உங்களுக்கு இதற்கு உரிமை உள்ளது. அதாவது இவர் ரத்து செய்யக்கூடியவர் ஆவார். தீயவர் ஆவார் என்று நிச்சயமாக இந்த விஷயத்தை கூறியிருப்பீர்கள். மேலும் அந்நிலையில் நீங்கள் என்னை வரம்பு மீறியவர் என்றும் தீயவர் என்றும் முர்தத் என்றும் கூறியிருப்பீர்கள். ஆனால் நானோ திருக்குர்ஆனில் எந்த மாற்றத்தையும் செய்யவில்லை. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த முதல் ஷரீஅத்தில் ஒரு புள்ளி, கமாவைக் கூட நான் மாற்றவில்லை. இன்னும்கூறப்போனால், நான் திருக்குர்ஆன் மற்றும் திருக்குர்ஆன் கட்டளைகளுக்கு தொண்டாற்றியுள்ளேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய மார்க்கத்தின் தொண்டிற்காக நான் மும்முரமாக இருக்கின்றேன். மேலும் நான் எனது உயிரைக் கூட இதே வழியில் ஈடுபடுத்திக் கொண்டேன். எனது முழுமையான நம்பிக்கை என்னவென்றால், முழுமையான மற்றும் நிறைவான வேதமாகிய திருக்குர்ஆனைத் கைவிட்டு விட்டும், அதற்கு முழுமையாக கட்டுப்படாமலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின்பற்றாமலும் இரட்சிப்பு என்பது சாத்தியமே கிடையாது. மேலும், திருக்குர்ஆனில் கூடுதல், குறைவு செய்யக்கூடியவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கட்டுப்படுதல் என்ற கடமையிலிருந்து தன்னை விளக்கிக் கொள்பவரை நான் காஃபிர் என்றும் முர்தத் என்றும் நம்புகின்றேன்.

எவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின்பற்றுவதிலிருந்து விலகிவிடுகின்றாரோ, அவர் முர்தத் ஆவார். அவர் நிராகரிப்பவர் ஆவார். பின்னர் அந்நிலையிலும், எனது உண்மைத்துவத்திற்கான ஆயிரக்கணக்கான அடையாளங்கள் வெளிப்பட்ட பிறகும் அவ்வாறு செய்பவர் இந்த நிலையை அடைகின்றார். இந்த விஷயம் மட்டுமே அல்ல. எனது வாதம் மட்டுமே இல்லை. மாறாக, அல்லாஹ் அடையாளங்களையும் காட்டியுள்ளான். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் குறித்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளும் முழுமையடைந்துள்ளன. திருக்குர்ஆனின் முன்னறிவிப்புகளும் முழுமையடைந்துள்ளன. மேலும் முழுமையடைந்து வருகின்றன. அல்லாஹ் எனக்கு ஆதரவாக இன்று வரை விண்ணிலும், பூமியிலும் அவற்றை வெளிப்படுத்தியுள்ளான். பின்னர் எந்த நபர் பொய்யர், இட்டுக்கட்டுபவர், தஜ்ஜால் போன்ற பெயரால் என்னை அழைப்பாரோ அல்லது எவர் என்னை பொருட்படுத்தமாட்டாரோ மேலும் எனது குரலின் பக்கம் எவர் செவிமடுப்பதில்லையோ நிச்சயமாக அறிந்து கொள்ளுங்கள்! இறைவன் ஒருபோதும், ஒருபோதும் அவரை தண்டிக்காமல் விட்டுவிட மாட்டான். (மல்ஃபூஸாத், தொகுதி 10, பக்கம் 308 - 309, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

எப்போதாவது நிச்சயம் அவர் பிடிக்கப்படுவார். ஆக, இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாதம் ஆகும். அன்னார் (அலை) மூலமாகவே திருக்குர்ஆன் ஞானங்களின் ஆழிய கருத்துகள் நம்மிடம் வரை வந்துள்ளன என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். அன்னார் (அலை) திருக்குர்ஆனை முழுமையாக பின்பற்றினார்கள். மேலும் அன்னார் திருக்குர்ஆனின் உண்மையான ஞானத்தை நமக்கு வழங்கினார்கள். நாம் நவூதுபில்லாஹ் திருக்குர்ஆனை அவமதிக்கக்கூடியவர்கள் ஆவோம் என்று அன்னார் (அலை) மீதோ அல்லது அன்னாரின் ஜமாஅத்தின் மீதோ ஆட்சேபனை செய்யக்கூடியவர்கள் அச்சம் கொள்ள வேண்டும். இந்த மக்கள் தங்களது பிடிவாதத்திலிருந்து விலகாமல் இருந்தனர் அல்லது விலகாமல் இருக்கின்றனர். இறைவன் அவர்களுக்கு தண்டனை வழங்காமல் விட மாட்டான். எவ்வாறு அவன் பிடிப்பான், எவ்வாறு அவன் தண்டனை வழங்குவான் என்பதை அல்லாஹ்வே நன்கு அறிகின்றான்.

திருக்குர்ஆன் தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பல்வேறு இடங்களில் சில கட்டளைகளைக் குறித்தும் எடுத்துரைத்துள்ளார்கள். ஒரு சிலவற்றை இங்கு எடுத்துரைக்கின்றேன்.

நீதியை நிலைநாட்டுவது தொடர்பாக திருக்குர்ஆனில் உள்ள உயர்தரமான போதனை தொடர்பாக அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: மக்கா வாசிகள் செய்தது போன்று எந்த சமுதாயங்கள் அநியாயமாக துன்புறுத்துகிறதோ, மேலும் தொல்லைகள் கொடுக்கின்றதோ, இரத்தம் சிந்துகின்றதோ, விரட்டியடிக்கின்றதோ, மேலும் குழந்தைகளையும், பெண்களையும் கொலை செய்கின்றதோ பின்னர் மோதல்களிலிருந்து விலகுவதில்லையோ அப்படிப்பட்ட மக்களுடனான விவகாரங்களில் நீதியுடன் நடந்து கொள்வது எவ்வளவு கடினமானது ஆகும்! மக்கள் இவ்வளவு அநீதியிழைக்கின்றனர். ஆனாலும் கூட அவர்களுடன் நீதத்துடன் நடப்பதற்கு போதனை உள்ளது. மிக கடினமான பணியாகும். ஆனால், அப்படிப்பட்ட உயிரையே பறிக்க விரும்பும் எதிரிகளாக இருப்பவர்களின் உரிமையையும் வீணாக்கவில்லை. மேலும் நீதி மற்றும் நேர்மையுடன் நடக்கும்படி போதித்துள்ளது. (நூருல் குர்ஆன், எண்: 2, ரூஹானீ கஸாயின், தொகுதி 9, பக்கம் 409)

இது எப்படிப்பட்ட போதனை என்றால் இது சமூகத்தின் அமைதிக்கான உத்திரவாதம் ஆகும். உலகின் அமைதிக்கு உத்திரவாதம் ஆகும். இன்று உலகியல் போர்களில் ஈடுபட்டுள்ள சமுதாயங்கள் இந்த போதனையை புரிந்து கொண்டால் பின்னர் உலகில் அமைதியை நிலைநாட்ட முடியும். இல்லையென்றால் என்ன சூழல் உருவாகிக் கொண்டிருக்கின்றதோ அது அபாயகரமான அழிவின் பக்கம் கொண்டு சென்று கொண்டிருக்கின்றது. ஒரு நாட்டின் முயற்சியாக இருக்கட்டும் அல்லது மற்ற நாட்டின் முயற்சியாக இருக்கட்டும். ஒரு நாட்டில் தலைவர் செல்லட்டும் அல்லது மற்ற நாட்டில் செல்லட்டும். சீனாவிற்கு செல்லட்டும் அல்லது வேறு எங்கும் செல்லட்டும். நீதியை நிலைநாட்டவில்லை என்றால் பின்னர் அழிவு உறுதியாகும்.

அடுத்து, ஓரிடத்தில் மற்றோர் உதாரணத்தை அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: ஒருவர் திருக்குர்ஆனின் காலத்தின் மீது ஒரு பார்வையை செலுத்தி பார்க்கட்டும். உலகில் பலதாரமணத்தின் எண்ணிக்கை எந்த அளவிற்கு எல்லை மீறி இருந்தது. திருமணங்கள் நிகழ்ந்து வந்தன. எத்தனை! எத்தனை! மனைவிகளை மக்கள் வைத்திருந்தனர்! எம்பது, நூறு மனைவிமார்களை ஆண்கள் வைத்திருந்தனர். எவ்வளவு வரம்பு மீறுதலுடன் பெண்களுடன் நடந்து கொள்ளப்பட்டு வந்தது! பெண்கள் மீது எத்தனை அநீதிகள் நிகழ்ந்து வந்தன! இந்த அனைத்து வரம்பு மீறுதலையும் திருக்குர்ஆன் ரத்து செய்து உலகின் மீது திருக்குர்ஆன் பேருபகாரம் செய்தது என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். (ஆரிய தர்ம், ரூஹானீ கஸாயின், தொகுதி 10, பக்கம் 45)

இது அல்லாஹ்வின் கருணையாகும். திருக்குர்ஆனின் போதனையின் கருணையாகும். அதாவது, திருக்குர்ஆனின் போதனையின் மூலமாக அல்லாஹ் அனைத்து தவறான வகையான விஷயங்களையும் முடிவுக்கு கொண்டு வந்துவிட்டான். பெண்ணிற்கு எந்த மரியாதையும் இருக்கவில்லை. திருமணங்களுக்கு எந்த வரையறையும் இருக்கவில்லை. உரிமைகள் வழங்கப்படவில்லை. இந்த அனைத்து விஷயங்களையும் திருக்குர்ஆன் பெற்றுக் கொடுத்தது. மேலும் இஸ்லாத்திற்கு முன்னர் அதற்கான சிந்தனையே இருந்திருக்கவில்லை.

பின்னர் ஓரிடத்தில் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: திருக்குர்ஆன் கூறுகின்ற அளவில் மட்டுமே நின்றுவிடவில்லை. ஏனெனில் அதில் மனிதர்களுக்கு புரிய வைப்பதற்காக பெரும் பெரும் பகுத்தறிவு சான்றுகள் உள்ளன. மேலும், அது எந்த அளவிற்கு கொள்கைகளையும், போதனைகளையும், கட்டளைகளையும் முன் வைத்துள்ளதோ அவற்றில் எதுவும் இப்படிப்பட்ட விஷயம் இல்லை. அதாவது அதில் பலவந்தமும், நிர்பந்தமும் இல்லை. என்னவெல்லாம் கட்டளைகள் உள்ளனவோ அவற்றில் எந்த பலவந்தமும் இல்லை.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: لَآ اِكْرَاهَ فِى الدِّيْنِ என்று அல்லாஹ் கூறுகின்றான். (அல்பக்கரா: 257) அதாவது மார்க்கத்தில் எந்த விஷயத்தையும் பலவந்தமாக ஏற்றுக் கொள்ளச் செய்தல் கூடாது. அதாவது மார்க்கத்தின் எந்த ஒரு விஷயத்தையும் பலவந்தமாக ஏற்றுக் கொள்ள வைக்க விரும்பவில்லை. மாறாக, ஒவ்வொரு விஷயத்திற்கும் சான்றை முன்வைக்கின்றது. (இஸ்லாமி உசூல் கி ஃபிலாஸஃபி, ரூஹானி கஸாயின், தொகுதி 10, பக்கம் 433) ஆதாரங்களை முன்வைக்கின்றது. பின்னர் ஏற்றுக் கொள்வதன் பக்கம் கவனமூட்டுகின்றது.

திருக்குர்ஆனின் முழுமையான போதனைக்கான அறிவிப்பை செய்தவாறு உலகிற்கு அறைகூவல் விடுத்தவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: உள்ளங்களில் மறைவான இரகசியங்களை மிகவும் நன்கு அறிந்த நமது கண்ணியத்திற்குரிய இறைவன் இந்த விஷயத்திற்கு சாட்சி ஆவான். அதாவது ஒரு நபர் ஓர் அணுவின் ஆயிரமாவது பங்கில் கூட திருக்குர்ஆனின் போதனையில் சில குறைபாட்டை எடுத்து காட்ட முடிந்தால் அல்லது திருக்குர்ஆனின் போதனைக்கு எதிராக மற்றும் அதை விட சிறந்த தனது ஒரு நூலின் அணு அளவிலான சிறப்பை நிரூபித்துவிட்டால் பின்னர் நான் மரண தண்டனையையும் ஒப்புக் கொள்வதற்கு ஆயத்தமாக உள்ளேன். (பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானீ கஸாயின், தொகுதி 1,பக்கம் 298, அடிக்குறிப்பு, எண் -2)

இது எப்படிப்பட்ட பெரும் வாதம் என்றால், முழுமையான ஈமான் மற்றும் உறுதி இல்லாமல் இந்த வாதத்தை செய்யவே முடியாது.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: ஒரு நபர் இறைவன் மீது நம்பிக்கை வைத்து பின்னர் இறைவன் திருக்குர்ஆனில் என்னவெல்லாம் கூறியுள்ளான் என்று திருக்குர்ஆனை சீர்தூக்கிப் பார்த்தால் அந்த நபர் பித்து பிடித்தவராக உலகை விட்டுவிட்டு இறைவனுக்காக ஆகிவிடுவார். (மல்ஃபூஸாத், தொகுதி 7, பக்கம் 28 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

முழுமையான ஈமான் இருந்தால், பின்னர் திருக்குர்ஆனை சீர்தூக்கிப் பாருங்கள். அவ்வாறு செய்தால் பின்னர் உலகியல் வாதத்திற்கு பகரமாக இறைவனின் பக்கம் எல்லா நேரமும் கவனம் இருக்கும். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த ஞானத்தை வழங்குவானாக.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இன்று முழு பூமியிலும் அனைத்து இல்ஹாமிய வேதங்களிலும் திருக்குர்ஆன் எனும்) ஃபுர்கானே மஜீத் மட்டுமே இறை வேதமாக இருப்பது உறுதியான சான்றுகளால் நிரூபணம் ஆகியுள்ளது.

அதனுடைய போதனை இரட்சிப்பிற்கு தேவையான முழுமையான உண்மை மற்றும் இயல்பின் அமைப்பை அடிப்படையாக கொண்டுள்ளன. இரட்சிப்பிற்கான போதனைகள் இயல்பின் அமைப்பை அடிப்படையாக கொண்டுள்ளன. அதன் கொள்கைகள் எந்த அளவிற்கு முழுமையானதாகவும் உறுதியானவையாகவும் உள்ளன என்றால், தெள்ளத் தெளிவான சான்றுகள் அவற்றின் உண்மைக்கு சாட்சியாகவும், அவற்றின் உண்மையை எடுத்துரைக்கக் கூடியதாகவும் உள்ளன. அவற்றின் கட்டளைகள் உண்மையை மட்டுமே அடிப்படையாக கொண்டுள்ளன. அதன் போதனைகள் எல்லா வகையான ஷிர்க்கின் அசுத்தம், பித்அத் மற்றும் படைப்பினத்தை வணங்குதல் ஆகியவற்றிலிருந்து முற்றிலும் தூய்மையானதாக உள்ளன. அதில் ஏகத்துவத்தையும், இறைவனின் மகத்துவத்தையும், முழுமையான இறைவனின் கண்ணியத்தையும் வெளிப்படுத்துவதற்காக உச்சபட்சமான உத்வேகம் உள்ளது. அதில் உள்ள சிறப்பு என்னவென்றால் அது முழுக்க முழுக்க இறைவனின் ஏகத்துவத்தால் நிறைந்துள்ளது. இறைவனின் ஏகத்துவம் நிறைந்திருக்கின்றது. பரிசுத்த இறைவனின் மீது எவ்வகையான பாதிப்பின் கறையையும், குறையையும், தகுதியற்ற பண்புகளையும் பொருத்துவதில்லை. மேலும் எந்தவொரு கொள்கையையும் பலவந்தமாக ஒப்புக் கொள்ள வைக்க விரும்பவில்லை. கொள்கைகளை பலவந்தமாக ஒப்புக் கொள்ளுங்கள் என்பது கிடையாது. மாறாக, அது என்ன போதனையை வழங்குகின்றதோ அதற்கான சான்றை வழங்குகின்றது.

கூறினார்கள்: இன்னும் கூறப்போனால் என்ன போதனை வழங்குகின்றதோ அதன் உண்மைக்கான காரணங்களை முதலில் காட்டிவிடுகின்றது. மேலும் எல்லா வகையான நோக்கத்தையும், வாதத்தையும் சான்றுகள் வலுவான ஆதாரங்கள் மூலம் நிரூபணம் செய்கின்றது. ஒவ்வொரு போதனையின் உண்மைத்துவத்தின் மீது சான்றுகளை தெளிவாக எடுத்துரைத்து முழுமையான நம்பிக்கை மற்றும் முழுமையான இறைஞானம் என்ற அந்தஸ்தை சென்றடையச் செய்கின்றது. மக்களின் கொள்கைகளிலும், செயல்களிலும், கூற்றுகளிலும், நடத்தைகளிலும் என்னென்ன சீர்கேடுகள், அசுத்தங்கள், குறைபாடுகள் மற்றும் குழப்பங்கள் படிந்துள்ளனவோ அவை அனைத்தின் குழப்பங்களையும் ஒளிமயமான சான்றுகளால் அகற்றுகின்றது. மேலும் மனிதன் மனிதனாக ஆகுவதற்காக மனிதன் அறிய வேண்டிய அந்த அனைத்து மரியாதைகளையும் கற்றுக் கொடுக்கின்றது. மனிதன் ஆகுவதற்கும் ஒழுங்குமுறைகள் உள்ளன. அந்த அனைத்து ஒழுங்குமுறைகளும் திருக்குர்ஆனில் கிடைக்கின்றன. குழப்பம் எந்த தீவிரத்துடன் இன்றைய நாட்களில் பரவியுள்ளதோ அதே தீவிரத்துடன் ஒவ்வொரு குழப்பத்தையும் திருக்குர்ஆன் தடுக்கின்றது. ஒரு காலத்தில் மட்டுமே குழப்பத்தை அகற்றுகின்றது என்பது அல்ல. மாறாக, எந்த தீவிரத்துடன் குழப்பம் இன்றைய நாட்களில் பரவியுள்ளதோ அதே தீவிரத்துடன் ஒவ்வொரு குழப்பத்தையும் எதிர்க்கின்றது. எவ்வாறு இன்றைய காலத்தில் பரவியுள்ளதோ அதேபோன்று அதனை எதிர்க்கும் ஆற்றலும் அதிலிருந்தே வெளிப்படுகின்றது. அதற்கான சிகிச்சையையும் அளிக்கின்றது. குழப்பத்தை அழிக்கின்றது. அதன் போதனை மிகவும் நேரானதும் வலிமையானதும் ஆகும். ஒருவகையில் இயற்கை கட்டளைகளுக்கான ஒரு கண்ணாடி ஆகும். மேலும் இயல்பின் சட்டங்களின் ஒரு நிழல் சித்திரமாகும். ஞானம் கொண்ட இதயத்திற்கும், அகப்பார்வை கொண்ட உள்ளத்திற்கும் ஒளிவழங்கக்கூடிய சூரியன் ஆகும். அறிவின் அழகுகளின் விளக்கத்தை வழங்கக் கூடியதும், அதன் பாதிப்புகளை சீர்படுத்தக் கூடியதும் ஆகும். (பராஹீனே அஹ்மதிய்யா, பாகம் 2, ரூஹானீ கஸாயின், தொகுதி 1, பக்கம் 81 -82)

சுருக்கமாக உள்ள அறிவின் விஷயங்களை விரிவான முறையில் எடுத்துரைக்கின்றது. மேலும் பாதிப்புகளுக்கு நிவாரணம் வழங்குகின்றது.

திருக்குர்ஆனின் படி உண்மையான முறையில் அமல் செய்யக் கூடியவர்களாகவும், அதன் போதனைகளுக்கு ஏற்ப அமல் செய்யக்கூடியவர்களாகவும், அதனை புரியக் கூடியவர்களாகவும் நமது வாழ்க்கையை அதற்கேற்ப கழிக்கக் கூடியவர்களாகவும் அல்லாஹ் நம்மை ஆக்குவானாக.

இந்த அருட்கொடையிலிருந்து பயன் பெறுவதற்காக எவ்வாறு ரமலானில் முயற்சி செய்து கொண்டிருக்கின்றீர்களோ அவ்வாறு ரமலானிற்கு பிறகும் முயற்சி செய்து கொண்டிருங்கள்.

ஜமாஅத்தின் எதிரிகளின் தீங்கிலிருந்து தப்பிப்பதற்காகவும் ரமலானில் குறிப்பாக துஆக்கள் செய்யுங்கள். அல்லாஹ் ஒவ்வொரு தீங்கிழைப்பவரின் கையையையும் தடுப்பானாக. மேலும் அவர்களை பிடிப்பதற்கான ஏற்பாட்டை செய்வானாக. உலகம் குழப்பம் மற்றும் சண்டை சச்சரவுகளிலிருந்து தப்பிப்பதற்காகவும் பொதுவாக அதிகமாக துஆ செய்யுங்கள். அதேபோன்று பாலஸ்தீனத்திலும் இன்றைய நாட்களில் பெரும் குழப்பம் உருவாகியுள்ளது. பாலஸ்தீன முஸ்லிம்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களை அநீதியாளர்களின் அநீதிகளிலிருந்து பாதுகாப்பானாக. மேலும், முஸ்லிம் உலகத்தின் தலைவர்களுக்கும் அறிவை வழங்குவானாக. அவர்கள் தமது சுயநலன்களை விட்டு வெளியேறி முஸ்லிம்களின் பொதுநலன்களை பாதுகாக்கக் கூடியவர்களாக ஆகட்டுமாக. கருணைகள் மற்றும் அருட்களின் வாசல்களை இந்த ரமலானில் முன்னரை விட அதிகமாக அல்லாஹ் நமக்காக திறப்பானாக.

தமிழாக்கம் :

மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

**உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?**

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

**நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.**

KHAIRUL-ISLAM

JAYGON-WEST BENGAL 97348 44732

## ஜுமுஆ பேருரை

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் மார்க்கத்தின் சீர்திருத்தத்திற்காக இறைவன் புறமிருந்து தோன்றவிருந்தவர் நானே ஆவேன். பூமியிலிருந்து காணாமல் போன அந்த ஈமானை மீண்டும் நிலைநாட்டுவதற்காகவும், இறைவனிடமிருந்து ஆற்றல் பெற்று அவனது கரத்தின் ஈர்ப்புச் சக்தியால் உலகை சீர்திருத்தம், இறையச்சம் மற்றும் உண்மையின் பக்கம் ஈர்ப்பதற்காகவும், அவர்களின் கொள்கை மற்றும் செயல் தவறுகளை அகற்றுவதற்காகவும் நான் தோன்றியுள்ளேன் ( ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்)

மற்றொரு கூட்டம் உள்ளது. அது இறுதி காலத்தில் வெளிப்படும். அவர்களும் முதலில் இருளிலும், வழிகேட்டிலும் இருப்பார்கள். மேலும் அறிவு, நுட்பமான ஞானம் மற்றும் நம்பிக்கையிலிருந்து வெகு தொலைவில் இருப்பார்கள். அப்போது இறைவன் அவர்களையும் ஸஹாபிகளின் வழியில் கொண்டு வருவான்

எந்த நிலையில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் பாரசீக வம்சாவளியைச் சேர்ந்தவரின் காலம் ஒன்றாக உள்ளதோ அதேபோன்று பணியும் ஒன்றே ஆகும். அதாவது ஈமானை மீண்டும் பூமியில் நிலைநாட்டுவது ஆகும். எனவே வாக்களிக்கப்பட்ட மஸீஹே பாரசீக வம்சாவளியைச் சேர்ந்தவர் ஆவார் என்பது உறுதியாக நிரூபணம் ஆகின்றது. அவரது ஜமாஅத்திற்கு ஆதரவாக وَاٰخَرِيْنَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوْا بِهِمْ என்ற வசனம் உள்ளது

இரண்டாவது கூட்டம் மேற்கூறப்பட்ட வசனத்திற்கேற்ப ஸஹாபிகளுக்கு ஒப்பான கூட்டம் ஆகும். அந்தக் கூட்டம் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் கூட்டம் ஆகும். ஏனெனில், இந்தக் கூட்டமும் ஸஹாபிகளைப் போன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அற்புதங்களை பார்க்கக் கூடியது ஆகும். மேலும் இருள் மற்றும் வழிகேட்டிற்கு பிறகு நேர்வழிப் பெறக்கூடியக் கூட்டம் ஆகும். மேலும் اٰخَرِيْنَ مِنْهُمْ என்ற வசனத்தில் அந்தக் கூட்டத்தினருக்கு مِنْهُمْ என்ற செல்வத்தில் அதாவது ஸஹாபிகளுடன் ஒப்புமை பெறக்கூடிய அருட்கொடையிலிருந்து பங்கு வழங்கப்பட்டுள்ளது

இறைவன் என்னை பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஈமானை புதுப்பிப்பதற்காகவும், இறைஞானத்தை வழங்குவதற்காகவும் அனுப்பியுள்ளான். மேலும், அவனது உதவி மற்றும் அருளால் எனது கரத்தில் விண்ணின் அடையாளங்கள் வெளிப்படுகின்றன. மேலும் அவனது நாட்டம் மற்றும் விருப்பத்திற்கு ஏற்ப (எனது) துஆக்களும் ஒப்புக் கொள்ளப்படுகின்றன

(ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்)

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 24 மார்ச் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **அமான்** மாதம் **24ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

**சென்ற இதழின் தொடர்ச்சி :**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: சூஃபிமார்கள் தமது ஆன்மிகக் காட்சிகளாலும் இந்த ஹதீஸை இறைத் தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து உண்மைப்படுத்தியுள்ளார்கள். அதாவது, அன்னாரிடமிருந்து அந்த ஹதீஸை அவர்கள் உண்மைப்படுத்தியுள்ளார்கள். முஸ்லிம் ஹதீஸில் வாக்களிக்கப்பட்ட மஸீஹிற்கு ஆதரவாக நபி என்ற சொல்லும் வந்துள்ளது. அவர் நபியாக இருக்கமாட்டார் என்று கூறுகின்ற நீங்கள் இதனையும் நினைவிற் கொள்ளுங்கள். ஒன்று வலிக்கான சான்று வழங்கியுள்ளார்கள். இரண்டாவதாக, வாக்களிக்கப்பட்ட மஸீஹிற்கு ஆதரவாக நபி என்ற சொல் ஹதீஸில் வந்துள்ளது. அதாவது உவமையாகவும், ஒப்புமையாகவும் கூறப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பாராஹீனே அஹ்மதிய்யாவிலும் இதேபோன்ற சொற்கள் இறைவன் புறமிருந்து எனக்கு ஆதரவாகவும் உள்ளன.

هُوَ الَّذِيْٓ اَرْسَلَ رَسُوْلَهٗ بِالْهُدٰى

என்பதும் இல்ஹாம் ஆகும். இந்த இடத்தில் ரஸூல் என்பதன் பொருள் இந்த எளியவன் ஆவேன். அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆவார்கள்.

அடுத்து பாருங்கள்! பராஹீனே அஹ்மதிய்யாவில்

جَرِيُّ اللّٰهِ فِيْ حُلَلِ الْاَنْبِيَآءِ

என்ற இல்ஹாம் உள்ளது. இறைவனின் தூதர் நபிமார்களின் ஆடையில் என்பது அதன் பொருள் ஆகும். நபி கிடையாது என்று நீங்கள் கூறுகின்றீர்கள். இது ஹதீஸிலும் கூட வருகின்றது. நான் நபி ஆவேன் என்று என்னிடமும் அல்லாஹ் கூறுகின்றான். இந்த இல்ஹாமில் எனது பெயர் தூதர் என்றும், நபி என்றும் வைக்கப்பட்டுள்ளது. எனவே எந்த நபருக்கு இறைவன் சுயமே இந்த பெயர்களை வைத்துள்ளானோ அவரை சாதாரண பொதுமக்களைச் சேர்ந்தவராக கருதுவது மிகவும் கீழான அவமரியாதையாகும். மேலும், இறைவனின் அடையாளங்களின் சாட்சியங்கள் எவ்வகையிலும் பலவீனமடைய முடியாது. அவை நபியின் மூலமாக வெளிப்பட்டாலும் சரி அல்லது முஹத்திஸ் மூலமாக (வெளிப்பட்டாலும் சரியே!).

அசல் விஷயம் என்னவென்றால், நமது நபி (ஸல்) அவர்களின் நபித்துவமும், அன்னாரின் அருட்களும் சுயமே ஒரு வெளிப்பாட்டை உருவாக்கி தனது சாட்சியத்தை தானே வழங்குகின்றது. வலிக்கு இலவசமாக பெயர் கிடைக்கின்றது. உண்மையில் வெளிப்படுகின்ற அடையாளங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையை வெளிப்படுத்துகின்றன. வலியின் பெயர் அல்லது எவருடைய பெயரும் இடையில் வந்துள்ளதோ எவரின் மூலமாக வெளிப்படுகின்றனவோ அவரின் பெயர் இலவசமாக வருகின்றது.

கூறினார்கள்: எனவே உண்மையில் உண்மைப்படுத்தக்கூடியவராக இருக்கின்ற வலி என்பவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்தே அழகைப் பெறுகின்றார். அவரிடமிருந்து அன்னார் (ஸல்) அழகைப் பெறுவதில்லை. (அய்யாமே சுல்ஹ், ரூஹானீ கஸாயீன், தொகுதி 14, பக்கம் 304 - 310)

தமது வாதம் தொடர்பாக அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: காலத்தின் தற்போதைய நிலையைக் கண்டும், பூமி வகை வகையான தீமைகள், பாவங்கள் மற்றும் வழிகேட்டால் நிறைந்திருப்பததைக் கண்டும் இறைவன் என்னை உண்மையைப் பரப்புவதற்காகவும், சீர்திருத்தத்திற்காகவும் நபியாக அனுப்பியுள்ளான்.

மேலும் இந்தக் காலமும் இவ்வாறு உள்ளது. இந்த உலகின் மக்கள் பதிமூன்றாம் நூற்றாண்டைக் கடந்து பதினான்காம் நூற்றாண்டின் துவக்கத்தை வந்தடைந்துவிட்டார்கள். அப்போது நான் அந்தக் கட்டளையை பேணும் வகையில் பொது மக்களிடத்தில் எழுத்துப்பூர்வமான பிரசுரங்கள் மற்றும் சொற்பொழிவுகள் மூலமாக இந்த குரலைக் கொடுக்கத் துவங்கினேன். அதாவது இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இறைவன் புறமிருந்து மார்க்கத்தை புதுப்பிப்பதற்காக தோன்றவிருந்த அந்த நபர் நானே ஆவேன் என்று அழைப்பு விடுத்தேன். பூமியிலிருந்து காணாமல்போன ஈமானை மீண்டும் பூமியில் நான் நிலைநாட்டுவதற்காகவும், இறைவனிடமிருந்து வலிமை பெற்று அவனது கரத்தின் ஈர்ப்புச் சக்தியால் உலகை சீர்திருத்தம், இறையச்சம், உண்மை ஆகியவற்றின் பக்கம் ஈர்ப்பதற்காகவும், அவர்களின் கொள்கை மற்றும் செயல் நிலை தவறுகளை நான் அகற்றுவதற்காகவும் நான் இந்த அழைப்பை விடுத்தேன். பின்னர், இதன் பிறகு சில ஆண்டுகள் கழிந்த பின்னர் இறை வஹீயின் மூலமாக எனக்கு இந்த விஷயம் தெளிவுபடுத்தப்பட்டது. அதாவது, இந்த சமுதாயத்திற்காக ஆரம்பம் முதலே வாக்களிக்கப்பட்டிருந்த அந்த மஸீஹ், இஸ்லாத்தின் வீழ்ச்சியின் நேரத்திலும் வழிகேடு பரவுகின்ற காலத்திலும் இறைவனிடமிருந்து நேரடியாக நேர்வழி பெறுகின்ற இறுதி மஹ்தி மற்றும் விண்ணின் உணவுத்தட்டுகளை புத்தம் புதிதாக மனிதர்களுக்கு முன்னால் வைக்கக்கூடியவர் இறை நியதியில் நியமிக்கப்பட்டுள்ளார். எவரைப் பற்றிய நற்செய்தி இன்றிலிருந்து பதிமூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னர் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் வழங்கியுள்ளார்களோ அவர் நானே ஆவேன். அது தொடர்பாக எவ்வித சந்தேகத்திற்கும், ஐயத்திற்கும் இடமில்லாத அளவிற்கு இறை உரையாடல்களும், ரஹ்மானிய உரையாடல்களும் தெளிவாகவும் தொடர்ந்தும் இறங்கின. இறங்கிய ஒவ்வொரு வஹீயும் இருதயத்தில் ஒரு பசுமரத்தாணி போல் பதிந்து விட்டது. இந்த அனைத்து இறை உரையாடல்களும் எந்த அளவிற்கு மகத்துவ மிக்க முன்னறிவிப்புகளால் நிறைந்துள்ளன என்றால், பட்டப்பகலைப் போன்று அவை முழுமையடைந்தன. (தத்கிரத்துஷ் ஷஹாதத்தைன், ரூஹானீ கஸாயீன், தொகுதி 20, பக்கம் 3-4)

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இறைவனை அடையாளம் காண்பதற்கான ஒளி குறைந்து, குறைந்து இறுதியில் ஆயிரக்கணக்கான மனஇச்சைகள் எனும் திரைகளின் மறைந்து விட்ட அந்தக் காலகட்டத்தில் இன்னும் கூறப்போனால், அந்தக் காலத்தில் பெரும்பாலான மக்கள் நாத்திக வாதிகளின் வடிவில் ஆகிவிடுகின்றனர். மேலும், பூமி பாவம் மற்றும் கவனமின்மை, கட்டுப்படாமை ஆகியவற்றால் நிறைந்துவிடுகின்றது. அதுபோன்ற காலத்தில் மீண்டும் தன்னை மக்களிடத்தில் வெளிப்படுத்த வேண்டும்

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 11 May 2023 Issue No. 19

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

என்று இறைவனின் தன்மானமும், கம்பீரமும், கண்ணியமும் எதிர்பார்க்கின்றது. எனவே, தொன்றுதொட்டு இருந்து வரும் நடைமுறைக்கேற்ப, நம்முடைய இந்த காலத்தில் அது போன்ற நிலைமைகளையும், அடையாளங்களையும் தன்னகத்தே ஒன்று கூட்டியுள்ள இக்காலத்தில் இறைவன் என்னை பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஈமானைப் புதுப்பிப்பதற்காகவும், இறைஞானத்திற்காகவும் தோன்றச் செய்தான். மேலும் அவனது உதவி மற்றும் அருளினால் எனது கரத்தில்

விண்ணின் அடையாளங்கள் வெளிப்பட்டுவிடுகின்றன. மேலும் அவனது எண்ணம் மற்றும் நாட்டத்திற்கேற்ப துஆக்களும் ஒப்புக் கொள்ளப்பட்டுவிடுகின்றன. மேலும் மறைவான விஷயங்கள் கூறப்படுகின்றன. மேலும் உண்மைத்துவங்களும், திருக்குர்ஆன் ஞானங்களும் எடுத்துரைக்கப்படுகின்றன. ஷரீஅத்தினுடைய கேள்விகளும், கடினங்களும் தீர்க்கப்படுகின்றன. மேலும் நான் பொய்யின் எதிரியும், இட்டுக் கட்டுபவரை அழித்தொழித்துவிடக் கூடிய அந்த கண்ணியமும், மேன்மையும் மிக்க இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். நான் அவன் புறமிருந்து வந்துள்ளேன். மேலும் அவன் அனுப்பியதனால் சரியான நேரத்தில் வந்துள்ளேன். மேலும் அவனது கட்டளையால் எழுந்து நிற்கின்றேன். மேலும் அவன் எனது ஒவ்வொரு அடியிலும் என்னுடன் இருக்கின்றான். அவன் எந்த விஷயங்களுக்கு எண்ணம் கொண்டுள்ளானோ அவனுடைய அந்த அனைத்து பணிகளையும் முழுமை செய்து விடாத வரை அவன் என்னையும் வீணாக்க மாட்டான். எனது ஜமாஅத்தையும் அழிவிற்குள்ளாக்க மாட்டான். அவன் என்னை பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஒளியை முழுமை செய்வதற்காக அனுப்பியுள்ளான். மேலும் என்னை உண்மைப்படுத்துவதற்காக ரமலானில் சந்திர, சூரிய கிரகணத்தை நிகழச் செய்தான். மேலும் உண்மையைத் தேடுபவர்களுக்கு போதுமானதாக அமையக் கூடிய ஏராளமான தெள்ளத் தெளிவான அடையாளங்களை அவன் பூமியில் காட்டினான். மேலும், இவ்வாறு அவன் தனது சான்றுகளை முழுமை செய்துவிட்டான். (அர்பயீன், எண்: 2, ரூஹானீ கஸாயின், தொகுதி 17, பக்கம் 347 - 348)

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நாங்கள் எப்படி வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வாதத்தை ஒப்புக் கொள்வது என்று இந்தக் கேள்வியை கேட்பது அவர்களின் உரிமையாகும். அந்நியர்கள் புறமிருந்து இவ்வாறு ஆட்சேபனை எழுப்பப்படுகின்றது.

அன்னார் (அலை) இந்த வாதம் செய்கின்றார்கள். அதனை எவ்வாறு ஒப்புக் கொள்வது? அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் நீரே ஆவீர் என்பதற்கு என்ன சான்று உள்ளது? காலம் அடையாளம் காணப்பட்டு விட்டது. நிலைமைகளும் அவ்வாறுதான் உள்ளன. எல்லாம் உள்ளன. அடையாளங்களும் வெளிப்பட்டுள்ளன. சரிதான்! ஆயினும், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் நீரே ஆவீர் என்பது எவ்வாறு அறிந்து கொள்வது? என்று அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர். கூறுகின்றார்கள்: இதற்குரிய பதில் என்னவென்றால், எந்த காலத்தில், எந்த நாட்டில், எந்த ஊரில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வெளிப்படுவது திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களிலிருந்து நிரூபணம் ஆகின்றதோ மேலும் எந்த செயல்களை வாக்களிக்கப்பட்ட மஸீஹின் இருப்பிற்கு சிறப்புக் காரணமாக ஆக்கப்பட்டுள்ளதோ மேலும், பூமி மற்றும் வானத்தின் எந்த நிகழ்வுகளை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வெளிப்படுவதற்கான அடையாளங்களாக எடுத்துரைக்கப்பட்டுள்ளதோ மேலும், எந்த அறிவுகளையும், ஆழிய ஞானங்களையும் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் சிறப்பு அடையாளங்களாக ஆக்கப்பட்டுள்ளதோ அந்த அனைத்து விஷயங்களும் என்னிடமும், எனது காலத்திலும், எனது நாட்டிலும், அல்லாஹ் ஒன்றுகூட்டிவிட்டான். விபத்துகளும் நிகழுந்து கொண்டிருக்கின்றன. நோய்களும் வந்து கொண்டிருக்கின்றன. நிலநடுக்கங்களும் வந்து கொண்டிருக்கின்றன. விண்ணின் அடையாளங்களும் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன. எனது வாதமும் இருக்கின்றது. மேலும் அல்லாஹ் எனது கைகளின் மூலம் அடையாளத்தையும் காட்டிக் கொண்டிருக்கின்றான். அவ்வாறிருக்க அவர் நானில்லை என்று நீங்கள் எப்படி கூறுகின்றீர்கள்? இவைதானே ஆதாரங்கள். அந்த அனைத்து விஷயங்களும் என்னிடமும், எனது காலத்திலும், எனது நாட்டிலும், அல்லாஹ் ஒன்றுகூட்டிவிட்டான். அடுத்து, அதிகபட்ச மனநிறைவிற்காக விண்ணின் அடையாளங்கள் எனக்கு ஆதரவாக உள்ளன. (கிதாபுல் பரிய்யா, ரூஹானீ கஸாயின், தொகுதி 13, பக்கம் 254- 255, அடிக்குறிப்பு)

விண்ணின் அடையாளங்களாக அன்னார் (அலை) கூறினார்கள்: வால்நட்சத்திரங்கள், சூரிய,சந்திர கிரகணம், பிளேக் நோய் பரவுதல், நிலநடுக்கங்கள் ஏற்படுதல் போன்ற ஏராளமான விஷயங்கள் உள்ளன.

ஜமாஅத்தின் முன்னேற்றங்களைக் குறித்து முன்கூட்டியே தகவலும், அடையாளங்களையும், உதவிகளையும் எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) ஏராளமான விஷயங்களை எடுத்துரைத்துள்ளார்கள். அதுதொடர்பாக நான் முன்னரும் கூறியதுபோன்று அன்னார் (அலை) ஏராளமான நூல்கள் எழுதியுள்ளார்கள். ஒன்றிரண்டு விஷயங்களை முன்வைக்கின்றேன்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: ஒரு மகத்துவ மிக்க அடையாளம் இதுவாகும். அதாவது, இந்த ஜமாஅத்தை அழித்து விடவேண்டும் என்று மக்கள் முயற்சி செய்வார்கள் என இன்றிலிருந்து 23 ஆண்டுகளுக்கு முன்னரே பாராஹீனே அஹ்மதிய்யாவில் இல்ஹாம் இடம் பெற்றுள்ளது.

இன்று வரை முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர். 130, 120 ஆண்டுகள் கழிந்து விட்டன.

எல்லா வகையான சதித் திட்டங்களையும் தீட்டுவர். ஆனால் நான் ஜமாஅத்தை வளர்ச்சி அடையச் செய்வேன் (என்று அல்லாஹ் கூறுகின்றான்). நான் முழுமையடையச் செய்வேன். மேலும் ஒரு படையாக ஆகிவிடும். மேலும் கியாமத் வரை அவர்கள் மேலோங்கி இருப்பர். மேலும் நான் உமது பெயரை பூமியின் எல்லைகளை வரை பிரபல்யம் அடையச் செய்வேன். மக்கள் கூட்டம் கூட்டமாக தொலைவிலிருந்து வருவார்கள். மேலும், எல்லா புறமிருந்தும் பொருளாதார உதவி வரும். இந்த ஏற்பாடுகள் விண்ணில் நடந்து கொண்டிருக்கின்றன. எனவே வீடுகளை விரிவுபடுத்துவீராக.

தற்போது பாருங்கள்! இது எந்தக் காலத்தின் முன்னறிப்பாகும்! அது இன்று நிறைவேறிக் கொண்டிருக்கின்றது. இது இறைவனின் அடையாளம் ஆகும். எவர்கள் கண்களுடையவர்களோ அவர்கள் பார்க்கின்றனர். ஆனால், எவர்கள் (ஆன்மிகக்) குருடர்களோ இருக்கின்றனரோ அவர்களை பொருத்த வரை இதுவரை எந்த அடையாளமும் வெளிப்படவில்லை. (நுஸூலுல் மஸீஹ், ரூஹானீ கஸாயின், தொகுதி 18, பக்கம் 384 - 385)

நான் கூறியது போன்று அவற்றிற்கான விரிவான விளக்கம் உள்ளது. மேலும் சில அடையாளங்களை இங்கு எடுத்துரைத்துவிடுகின்றேன்.

இதன் தொடர்ச்சி : அடுத்த இதழில்......

தமிழாக்கம் : மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

**National Watch Company**

**Sales & Service**



**B. Mohamed Adil**
93632 06679
99433 38000

196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad